R.R. 63/68

மேழிச்செல்வம்

பராபவ ௵ ஆனி மீ
1966 ஜூன்-ஜூலை

24—5—66 அன்று கோய முத்தூர் விவசாயக் கல்லூரி ஆய்வுக்கூடத்தில் நடைபெற்ற உரம் பற்றிய கருத்தரங்கைத் துவக்கிவைத்து விவசாயத் துறை நெறியாளர் திரு K.V. ராமநாதன் அவர்கள் உரையாற்றுதல்.



உரம்பற்றிய கருத்தரங்கில் கலந்துகொண்ட பிரதிநிதி களில் ஒரு பகுதி.

உரம்பற்றிய கருத்தரங்கில் குழு விவாதம் நடைபெறு கிறது.

மேழிச்செல்வம் சந்தா தாரர்களுக்கு

நினைவூட்டுகிறோம்.

1966-ம் ஆண்டு ஆகஸ்ட்–செப்டம்பர் மாதம் (ஆவணி) மாதம் இதமுடன் முடிவாகும் "மேழிச்செல்வம்" சந்தா தாரர்களின் சந்தா எண்கள் மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

மாவட்டம்	சந்தா எண் முதல்	வரையுள்ள
செங்கல்பட்டு	4202	4218
தென் ஆற்காடு	7874	8058
வட ஆற்காடு	1344	1425
தஞ்சாவூர்	2667	2765
திருச்சி	8352	8433
சேலம்	9876	10000
ஷை	1	43
மதுரை	4932	4988
கோயமுத்தூர்	7186	7288
இராமநாதபுரம்	4109	4209
திருநெல்வேலி	1145	1313
கன்னியாகுமரி	2187	2191
நீலகிரி	—	—
உள்ளூர் சந்தா	2685	2686

"மேழிச்செல்வம்" தொடர்ந்து பெற மேற்படி சந்தா தாரர்கள் வருட சந்தாத் தொகை ரூ. 3 (மூன்று மட்டும்) 1966-ம் ஆண்டு ஆகஸ்டு 31-ந் தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பி புதுப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம்.—

"விவசாய நெறியாளர்,
தபால் பெட்டி எண் 412,
சேப்பாக்கம், சென்னை-5."

புதுப்பிக்கும்போது தவறுமல் மாவட்டத்தையும் சந்தா எண்ணையும் அதில் குறிப்பிடவும்

முன்பு தலைமை அலுவலகத்தில் சந்தா செலுத்தியவர்கள் சந்தா எண்ணுடன் உள்ளூர் சந்தா என்று குறிப்பிடவும்.

புதிதாக சந்தா செலுத்த விரும்புவோர் ஆண்டு சந்தா தொகை ரூ. 3 (மூன்று மட்டும்) அருகில் உள்ள விவசாய அலுவலகத்தில் செலுத்தலாம், அல்லது மணியார்டர் மூலம் மேற் குறிப்பிட்ட முகவரியில் செலுத்தி சந்தாதாரராகப் பதிவு செய்துக் கொள்ளலாம். சந்தா தொகை செலுத்தும்போது தங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

ஆறுமாத சந்தா கிடையாது. தபால் தலைகள் ஏற்று கொள்ளப்பட மாட்டா. சந்தாதாரர்கள் விலாசத்தில் மாறுதல் ஏற்பட்டால், மாவட்டம், சந்தா எண் முதலிய வற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு மேற்கண்ட முகவரிக்கு கடிதம் எழுதவும்.

உள்ளுரை

	பக்கம்
புதிய நெல் ரகங்கள்—தலையங்கம் ..	5
சென்னை மாநிலத்தில் நெல், சிறு தானியப் பயிர்களில் தேசிய நிருபணங்கள்	7
விவசாயச் செய்திக் கதிர் ..	10
நெல் சாகுபடி அனுபவம் ..	12
விற்பனைக் குழுத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் ஆறுவது மாநாடு, தஞ்சாவூர்	14
தேனீக்களுக்கு மற்றும் ஓர் எதிரி ..	16
அதிக விளைச்சல் தரும் வீரியச் சோளம் சி. எஸ். எச். 1.	17
கேள்வியும் பதிலும் ..	20
கத்தரிச் செடியில் காணும் நோய்கள் ..	22
மேலும் அதிகம் என்பதே அவர் மேற்கொள் வாசகம்	23
வானொலிச் செய்திகள் ..	24
கால நிலையும் பருத்தி சாகுபடியும் ..	27
சாமை சாகுபடிக்கு கொ. 1. சாமை ..	28
காய்கறி உற்பத்தி பெருக ..	28
1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திய கால நிலை அறிக்கை	29

விளம்பரங்கள் :

டாடா பைஸன் ராலீஸ் ..	4
ராஜா பண்ணைத் தோட்டம் ..	13
வால்டாஸ் ..	15
சூப்பர் ..	19
கஜலக்ஷ்மி கலப்பு உரங்கள் ..	28

மேழிச்செல்வம்

வருடாந்திர சந்தா ரூ. 3·0

தனிப் பிரதி ரூ

ஆண்டு மலர்

டாடா பைஸன் ராலீஸ்
பயிர் அபிவிருத்திக்குப் பணி
புரிகின்றது
TATA FISON RALLIS
TREE BRAND
FERTILIZERS AND PESTICIDES
SHBI-RF-86 TAM

மேழிச்செல்வம்

சுழன்றும் ஏர்ப்பின் துலகம் அதனு
லுழந்தும் உழவே தலை.

மலர் 23 | பராபவஹு ஆனிமீ 1966—ஜூன்-ஜூலை | இதழ் 6

புதிய நெல் ரகங்கள்.

சென்னை விவசாய இலாகா, மாநில விதைக் குழுவின் சிபாரிசின் பேரில் மூன்று நெல் தினுசுகளை சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் சாகுபடி செய்ய ஏ.எஸ்.டி. 13 ரகமும், தஞ்சை ஜில்லா ஆழக்கால் நிலங்களில் சாகுபடி செய்ய டி.என்.ஆர். 2 ரகமும், தஞ்சை மாவட்ட வடிகால் வசதியற்ற பகுதிகளில் சிகப்பு நெல் என்று அழைக்கப்படும் ஆடுதுறை 3-க்கு பதிலாக பயிரிட ஏ.டி.டீ. 28 ரகமும் புதிதாக சிபாரிசு செய்யப்படுகின்றது. இந்தப் பொறுக்கு ரகங்கள் பின்வரும் சிறப்புத் தன்மைகள் கொண்டவையாகும்.

நெல் ரகம் ஏ.எஸ்.டி. 13

ஏ.எஸ்.டி. 13, மோட்டா வகையைச் சேர்ந்த சிவப்பு நிற அரிசி கொண்ட நீண்ட கால நெல் ரகமாகும். இந்த ரகம், திருநெல்வேலி ஜில்லாவில் நாங்குனேரி, திருச்செந்தூர், சங்கரன்கோவில் தாலூகாவிலும், கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு பகுதியிலும் பயிரிட ஏற்றது. இந்த நெல் உயர் வழித் தேர்வு முறை மூலம் அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சிப் பண்ணையில் சோதிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டது. 'கல்சர் 8748' என்று சொல்லப்படும் இந்நெல் வகை இப்பொழுது ஏ.எஸ்.டி. 13 என வெளியிடப்பட்டுள்ளது. ஜில்லா ரீதியில் 12.4 சதவீதம் உள்ளூர் ரகத்தைவிட அதிக விளைச்சல் தந்துள்ளது. இந்த ரகம் ஜில்லா அளவு தேர்வில் ஏக்கருக்கு சராசரி 1711 கிலோ விளைச்சல் தந்துள்ளது. ஆகவே திருநெல்வேலி மாவட்டத்திலும் கன்னியாகுமரி ஜில்லாவின் ஒரு பகுதியிலும் குறிப்பாக அரிகிரவி நெல்லுக்குப் பதிலாக பிசானம் பருவத்தில் பயிரிட ஏ.எஸ்.டி. 13 ரக நெல் சிபாரிசு செய்யப்படுகிறது.

ஆழக்கால் நிலங்களுக்கேற்ற டி. என். ஆர். 2 ரக நெல்.

திருத்துறைப்பூண்டி தாலுக்காவின் தலைஞாயிறு, முத்துபேட்டை பிர்க்காக்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சீர்காழி, நாகப்பட்டினம் தாலுக்காக்களிலும் காணப்படும் சுமார் 30,000 ஏக்கர் பரப்பளவில் செப்டம்பர்-அக்டோபர் முதல் ஜனவரி பிப்ரவரி வரை சாதாரணமாக 5 அடி ஆழம் வரை நீர்தேங்குகின்ற ஆழக்கால் நிலங்களில் பயிரிடப்படும் காட்டுவானம் நெல்லுக்குப் பதிலாகப் பயிர் செய்ய டி.என்.ஆர் 2 பொறுக்கு ரகநெல் வெளியிடப்பட்டுள்ளது. டி.என்.ஆர். 2 ரகம் 210 நாட்கள் வயதுடைய நெல் ரகமாகும். சிவப்பான அரிசி கொண்ட இந்த ரகம் ஜூன்-ஜூலை முதல் ஜனவரி பிபரவரி பருவத்தில் பயிரிட ஏற்றதாகும். ஏக்கருக்கு சராசரி 1100 கிலோ விளைச்சல் தரவல்லது. நல்ல ருசியும் சமையல் குணங்களும் கொண்ட இந்த ரகம் தற்போது சாகுபடியிலுள்ள காட்டுவானம் ரகத்தைவிட அதிக விளைச்சல் தரக்கூடியதாகும்.

ஏ.டி.டீ. 28 குறுவை நெல்.

தஞ்சையில் ஜூன்-ஜூலை முதல் செப்டம்பர் அக்டோபர் வரை பயிரிட ஏ.டி.டீ. 3 நெல்லுக்குப் பதிலாக ஏ.டி.டீ. 28 சிபாரிசு செய்யப்படுகிறது. ஏ.டி.டீ. 3-ஐ விட 7 நாட்கள் அதிக வயதுடையதாகும். அதாவது 102 நாட்கள் வயதுடையதாயினும், சாயாத சிறப்புத் தன்மையுடையதால் இந்த ரகம் சிபாரிசு செய்யப்படுகிறது.

இந்த நெல் சீர்காழி, செம்பனார்கோயில், நன்னிலம், திருமருகல், கீவலூர், நாகப்பட்டிணம் வட்டாரங்களில் குறிப்பாக வடிகால் வசதியற்ற 50,000 ஏக்கர் பகுதிகளுக்கு மிகவும் சிறந்தது.

இந்த நெல் ஏ.டி.டீ. 3 நெல்லுடன் சிஹச். 42 என்னும் விறைத்த தாளுடைய சீன ரகத்தை இனக் கலப்புச் செய்ததன் மூலம் உருவானது. விவசாயிகளின் வயலிலும், மாநில விதைப்பண்ணைகளிலும் பயிரிடப்பட்டு 18·6 சதவீதம் அதிக கொள்முதல் கண்டது. சராசரி ஏக்கர் விளைச்சல் 1,598 கிலோ கிராம் ஆகும். இதன் அரிசி வெள்ளை நிறம். வடிகால் வசதியற்ற பிரதேசங்களில் தலைசாயாத நெல் என ஏ.டி.டி. 3-க்குப் பதிலாக இந்த ஏ.டி.டி. 28 நெல்லை பயிரிட்டு அதிக மகசூல் பெறுங்கள்.

புதிய பொறுக்கு நெல் ரகங்கள் சிபாரிசு செய்யப்படும் இடங்களில் விவசாயப்பெருமக்கள் அனைவரும் இந்த ரகங்களைப்பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்கவேண்டுகிறோம்.

உரத் துறை கருத்தரங்கு

மே 24, 25 தேதிகளில் கோயமுத்தூரில் இரசாயன உரத் துறை கருத்தரங்கு நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் விவசாயத்துறை, கூட்டுறவுத் துறை அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள், உரத் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துக்கொண்டு உரம் பற்றிய பல்வேறு பிரச்னைகளை விவாதித்துள்ளனர்.

இக்கருத்தரங்கில் கலந்துக் கொண்டவர்கள் நான்கு குழுக்களாகப் பிரிந்து பிரச்னைகளை விவாதித்துள்ளனர். முதற்குழு நெல், சிறுதானியங்கள், கரும்பு, பருத்தி, நிலக்கடலை, வாழை, உருளைக்கிழங்கு போன்ற முக்கிய பயிர்களுக்கு இடவேண்டிய உரங்கள் பற்றியும், கலப்பு உரங்களின் தர நிர்ணயம் பற்றியும் விவாதித்துள்ளது. இரண்டாம் குழு உரக்கட்டுப்பாடு சட்டம் அமுல்படுத்துவதையும் உபயோகத்தையும் பற்றி விரிவாக விவாதித்துள்ளது. உரம் பற்றியும், அதன் உபயோகம் பற்றியும் விவசாயிகள் அறியும் வகையில் கல்வியறிவூட்டும் திட்டம் பற்றி மூன்றும் குழு விவாதித்துள்ளது. நான்காம் குழு காப்பி, தேயிலை, ரப்பர், கமுகு, தென்னை, ஏலம் போன்ற பயிர்களுக்கு உபயோகப் படுத்தப்பட வேண்டிய உரங்களின் அளவு தர நிர்ணயம் பற்றி விவாதித்துள்ளது.

இக் கருத்தரங்கு நல்ல பல தீர்மானங்களை இயற்றி பரிசிலனைக்கு அனுப்பியுள்ளது.

தாய்ச்சுங் நேடிவ் 1.

செங்கல்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கம் வட்டாரத்தில் உள்ள மொகல்வாடி கிராமத்தில் கோடைப் பருவத்தில் புதிய நெல் ரகமான தாய்ச்சுங் நேடிவ் 1-ஐ திருமதி அஞ்சலினு ராயப்பா அவர்கள் பயிர்செய்து அறுவடை செய்தபோது ஏக்கருக்கு 7,630 ராத்தல் மகசூல் கிடைத்துள்ளது.

இந்த ரகம் வேறு பல இடங்களிலும் நல்ல மகசூலைத் தந்துள்ளது.

தாய்ச்சுங் நேடிவ் 1 ரக நெல்லை ஜனவரி முதல் ஏப்ரல் மே வரையுள்ள நவரைப் பருவத்தில் மட்டுமே சாகுபடி செய்யுமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த ரகம் 'பாக்டிரியல் பிளைட்' என்னும் நோயால் பெரிதும் தாக்கப்படுவதால். அதை தடுக்க தக்க நுண்ணுயிர் நாசினிகளை உபயோகப்படுத்த வேண்டும். இந்த நுண்ணுயிர் நாசினி கிடைப்பது அரிதாயிருப்பதால், இம்மருந்தை வேண்டிய அளவில் தயாரிப்பாளர்களாகிய பிம்பிரி தொழிற்சாலை பூனாவிலிருந்து முதலிலேயே பெற தக்க ஏற்பாடுகள் செய்துகொள்ள வேண்டும். நுண்ணுயிர் நாசினிகள் தேவையான அளவில் கைஇருப்பு இல்லாமல் இந்த ரகத்தை பயிர் செய்வதால், மகசூல் பெரிதும் பாதிக்கப்பட்டு நஷ்டமடைய நேரிடலாம். மேலும் விவசாயிகள் இந்த ரக விதைகளை வேறிடங்களிலிருந்து பெறாமல் தேசிய விதைகள் கார்ப்பரேஷன் மூலமே பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை மாநிலத்தில் நெல், சிறுதானியப் பயிர்களில் தேசிய நிருபணங்கள்

தேசிய நிருபணங்கள்

மத்திய அரசாங்கம் விஞ்ஞான விவசாய முறைகளைக் கையாள்வதால் விளைச்சலை உயர்த்த முடியும் என்பதை விவசாயிகளுக்கு விளக்கிக் காட்டும் பொருட்டு 1965—66-ம் வருடத்தில் இந்தியா முழுவதும் முக்கியப் பயிர்களில் நிருபணங்கள் நடத்தியது. இந்நிருபணங்கள் விவசாய ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு நாடெங்கிலும் நடத்தப்பட்டன. சென்னை மாநிலத்தில் இதன்படி நெல்லுக்காக 14 நிருபணங்களும், சிறு தானியப் பயிர்களில் 12 நிருபணங்களும் போடப்பட்டன. ஆனால் நெல் பயிரில் 12 நிருபணங்களே நடத்தப்பட்டன. லோயர் பவானி பிராந்தியத்தின் தண்ணீர் தட்டுப்பாட்டால் இரண்டு நிருபணங்கள் கைவிடப்பட்டன.

இந்த தேசிய நிருபணங்களில் ஒவ்வொரு பயிருக்கும், பயிரிடப்படும் இடத்துக்கு ஏற்ப அடையவேண்டிய விளைச்சல் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளின் வயல்களில் இந்நிருபணங்கள் போடப்பட்டன. அவற்றுக்குத் தேவையான விதை, உரங்கள், பூச்சி மருந்துகள் முதலியன இந்திய அரசினரால் கொடுத்து உதவப்பட்டது. ஒவ்வொரு பயிருக்கும் சிபாரிசு செய்யப்பட்ட திருந்திய சாகுபடி முறைகள் நிருபண வயல்களில் கையாளப்பட்டன. நிருபணங்கள் நடத்துவதின் பொறுப்பு அந்தந்த பிராந்திய ஆராய்ச்சியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறியளவும் விளைச்சலும்

நெல் பயிர் சாகுபடியில் ஹெக்டருக்கு சராசரி 4.208 கிலோ விளைச்சல் குறியளவு நிர்ணயிக்கப்பட்டது. இந்த குறியளவு எல்லாப் பருவத்திற்கும் எல்லா இடத்திற்கு மாக நிர்ணயிக்கப்பட்டது. பல மாவட்டங்களில் பருவக் கோளாறு காரணமாக, விளைச்சல் சற்று குறைந்து ஹெக்டருக்கு சராசரியாக 4,180 கிலோவே விளைந்தது. ஆனால் மொத்தம் 12 நிருபணங்களில் சுமார் ஆறு நிருபணங்களில் விளைச்சல், நிர்ணயிக்கப்பட்ட குறியளவை விட கூடுதலாக இருந்தது. நெல் பற்றிய நிருபண முடிவுகள் பின்வருமாறு :—

வரிசை எண். (1)	இடம். (2)	பயிரிடப்பட்ட ரகம். (3)	ஹெக்டருக்கு கிடைத்த விளைச்சல் (கிலோ). (4)	குறியளவு. (கிலோ) (5)	குறிப்பு. (6)
1.	கோயம்புத்தூர் :				
	வேடப்பட்டி	கோ. 30	4,588	4,000	..
	கொமாரபாளையம்	கோ. 30	4,708	4,000	..
2.	திருர்குப்பம்:				
	நெல் ஆராய்ச்சிப் பண்ணை, திருர்குப்பம்.	பி.எ.எம். 3	2,915	3,500	தொடர்ச்சியான வறட்சியினால் நீர்ப்பாசனம் சரிவர அளிக்கப்பட முடியவில்லை.
	திருர்குப்பம்	பி.எ.எம். 3	2,873	3,000	,,
3.	அம்பாசமுத்திரம்:				
	கள்ளிடைக்குறிச்சி	ஏ.எஸ்.டி. 1	3,618	5,000	வளர்ச்சிப் பருவத்தில் எதிர்பாராத வாடை ஏற்பட்டதால் விளைச்சல் குறைந்தது.
	கள்ளிடைக்குறிச்சி	கோ. 25	3,059	4,000	நடுகைக்குமுன் வேரோட்டத்தால் அதிக வளர்ச்சியடைந்து விளைச்சல் குறைந்தது.
	அம்பாசமுத்திரம்	ஏ.எஸ்.டி. 1	5,906	5,000	..
	அம்பாசமுத்திரம்	கோ. 25	4,361	4,000	..

வரிசை எண்.	இடம்.	பயிரிடப்பட்ட ரகம்.	ஹெக்டருக்கு கிடைத்த விளைச்சல் (கிலோ)	குறியளவு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
4.	ஆடுதுறை :				
	சூர்யநார்கோயில்	ஏ.டி.டீ. 27	4,532	5,000	நட்ட 12 நாட்களுக்குள் நீர் பற்றுக்குறை ஏற்பட்டது.
	சூர்யநார்கோயில்	கோ. 25	3,349	4,000	நீர் பற்றுக்குறையால் பாதிக்கப்பட்டது.
	திருப்பனபேட்டை	ஏ.டி.டீ. 27	5,503	5,000	..
	திருப்பனபேட்டை	கோ. 25	4750	4000	..

கோயம்புத்தூரிலும், அம்பாசமுத்திரத்திலும் குறியளவைவிட 25 சதவீத கூடுதல் விளைச்சல் கிடைத்தது. ஹெக்டருக்கு 5,906 கிலோ என மிக அதிக விளைச்சல் திருநெல்வேலியில் சாகுபடி செய்யப்பட்ட ஏ.எஸ்.டி. 1 ரகத்திலும் கிடைத்துள்ளது. அடுத்தப்படியாக ஹெக்டருக்கு 5,503 கிலோ விளைச்சல் திருப்பனபேட்டையில் சாகுபடி செய்யப்பட்ட ஆடுதுறை 27 ரகத்திலும் கிடைத்தது. ஆனால் குறியளவோ 5,000 கிலோதான். தஞ்சை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட கோ. 25 கோவை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட கோ. 30 போன்ற ரகங்களிலும் குறிக்கோள் விளைச்சலாகிய 4,000 கிலோவைவிட ஹெக்டருக்கு 4,750 கிலோ, 4,708 கிலோ விளைந்தது குறிப்பிடத்தக்கது.

சிறுதானியப் பயிர்கள்.

சிறுதானியப் பயிர்களில் போடப்பட்ட நிரூபணங்களின் முடிவுகள் பின்வருமாறு :—

வரிசை எண்.	இடம்.	பயிரிடப்பட்ட ரகம்.	ஹெக்டருக்கு கிடைத்த விளைச்சல் (கிலோ).	குறியளவு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	கோயமுத்தூர்	கம்பு எச்.பி. 1 (இறைவை)	4,375	1,500	
2.	கோயமுத்தூர்	கம்பு எக்ஸ். 3 (இறைவை)	2,005	1,500	
3.	பெரியநாயக்கன் பாளையம்	கம்பு எக்ஸ். 3 (மானாவாரி)	தகவல் இல்லை.	800	
4.	சத்தியமங்கலம்	,,	680	800	
5.	தென் ஆற்காடு	,,	680	800	
6.	கோவில்பட்டி	,,	919	800	
7.	கோவில்பட்டி	கம்பு கே. 1 (மானாவாரி)	929	800	
8.	கோவில்பட்டி	,,	563	800	
9.	கோயமுத்தூர்	ராகி கோ. 7 (இறைவை)	5,202	3,000	
10.	கோயமுத்தூர்	,,	3,915	3,000	
11.	கோவில்பட்டி	ராகி கே. 2 (இறவை)	2,210	3,000	
12.	கோவில்பட்டி	ராகி கே. 2	1,698	3,000	

தேசிய நிரூபணங்களின் வரிசையில் சிறுதானியங்களுக்காக ஹெச்.பி. 1 கம்பு இறைவையாகவும், எக்ஸ். 3 கம்பு இறைவையாகவும், மானாவாரியாகவும், கே. 1 கம்பு மானாவாரியாகவும் பயிரிடப்பட்டன அதேபோல் ராகி சிறுதானிய பயிரில் கோ. 7 ராகியும், கே. 2 ராகியும் பயிர் செய்யப்பட்டன.

நிர்ணயிக்கப்பட்ட குறியளவான ஹெக்டருக்கு 1500 கிலோ விளைச்சலைவிட ஹெச் பி. 1, எக்ஸ். 3 கம்பு ரகங்கள் கோயமுத்தூரில் இறைவைப் பயிராக பயிரிட்டதில் முறையே 4,375 கிலோ, 2,500 கிலோ விளைச்சல் தந்துள்ளன. எக்ஸ். 3, கே. 1, கம்பு ரகங்கள் திருநெல்வேலியில் மானாவாரிப் பயிராக நிர்ணயிக்கப்பட்ட குறி

யளவான 800 கிலோவைவிட முறையே 119, 129 கிலோ கூடுதல் மகசூல் அளித்துள்ளன. நம்நாட்டிலேயே மிக அதிகமாக, அதாவது ஹெக்டருக்கு 5,202 கிலோ விளைச்சலை கோ. 7 ராகி ரகம் இறைவையாக கோயமுத்தூரில் தந்துள்ளது பெருமைக்குரியதாகும். இவ்வளவு அதிக மகசூலை நம் நாட்டில் இதுவரை யாரும் அறிந்ததில்லை. மற்றுமொரு நிரூடணத்தில் குறியளவான 3,000 கிலோவுக்கு, ஹெக்டர் விளைச்சல் 3,900 கிலோ கோவையில் கோ. 7 ராகி, பயிரிட்டதில் கிடைத்தது.

1965–66-ல் நடத்தப்பட்ட நிரூடணங்களின் முறைகளைக் கண்டு 1966–67-ல் அதிக அளவில் தேசிய நிரூபணங்கள் போட திட்டமிடப்பட்டுளளது. 1966-ம் வருடம் 'அகில உலக அரிசி வருடமாகக்' கொண்டாடப்படுவதையொட்டி நெல் பயிரில் மத்திய விவசாய அமைச்சரின் ஆலோசனையையொட்டி மொத்த குறியளவான 1,000 தேசீய நிரூபணங்களில் அதிக விளைச்சல் தரும் ரகங்களைக் கொண்டு 90 தேசீய நிரூபணஙகளை சென்னை மாநிலத்தில் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இம்முறை நிரூபணங்கள், விஸ்தரிப்பு அலுவலர்களாலேயே போடப்பட்டு, மாவட்ட விவசாய அலுவலரின் சொந்த பொறுப்பில் விடப்படும். இம்முறையினால் அதிக அளவு விவசாயிகள் இத்தேசீய நிரூபணஙகளைப் பார்த்து பயனடைவர்.

1966–67-ல் :—

(அ) குறுவை, கார் அல்லது சொர்ணவாரி பருவத்தில் பல்வேறு மாவட்டங்களில் ஹெக்டர் விளைச்சல் குறியளவு 5,000 கிலோவாக கொண்டு ஏ.டி.டி. 2 நெல் ரகத்தில் 38 நிரூபணங்கள் போடுதல்.

(ஆ) மதுரை மாவட்டத்தில் மட்டும் சம்பா பருவத்தில் ஹெக்டர் விளைச்சல் குறியளவு 4,000 கிலோவாக கொண்டு கோ. 25 நெல் ரகத்தில் எட்டு நிரூபணஙகள் போடுவது.

(இ) பல்வேறு மாவட்டங்களில் தாளடி, பிசானம், அல்லது நவரை பட்டங்களில் கோ. 25, கோ. 29 ரகங்களைக் கொண்டு ஹெக்டருக்கு 4,000 கிலோ விளைச்சல் என்ற குறியளவுடன் 34 நிரூபணங்கள் போடுதல்.

இவை தவிர விவசாயப் பண்ணைகள், ஆராய்ச்சி நிரூபணங்கள் ஆகியவற்றை அடுத்துள்ள வயல்களில் ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு விவசாயிகளின் நிலங்களில் மேலும் 10 நிரூபணங்கள் போடப்படும்.

சிறுதானியப் பயிர்களில் சென்னை மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்ட 30 நிரூபணங்களில், 22 நிரூபணஙகள் விஸ்தரிப்பு ஊழியர்களாலும் எட்டு நிரூபணங்கள் ஆராய்ச்சி அலுவலர்களாலும் போடப்படும். இடத்துக்கேற்ப ஹெக்டர் விளைச்சல் குறியளவு 2,000 முதல் 3,000 கிலோவரை நிர்ணயிக்கப்பட்டு சி.எஸ்.எச். 1 சோளம் ரகம் கொண்டு ஏழு நிரூபணங்களும், 2,000 கிலோ விளைச்சல் குறியளவுடன் ஹெச்.பி. 1 கம்பில் ஐந்து நிரூபணங்களும், 4,000 கிலோ விளைச்சல் குறியளவுடன் தட்சிண மக்காச் சோளம் கொண்டு மூன்று நிரூபணங்களும், 3,000 கிலோ குறியளவுடன் கோ. 7, பி.எல்.ஆர். 1, கே. 2 ராகி ரகங்களைக் கொண்டு ஏழு நிரூபணங்களும் போடப்படும்.

அமோக விளைச்சலைத்தரும் ரகங்களைச் சாகுபடி செய்யும் இந்த நேரத்தில் திருந்திய விவசாய முறைகளைக் கையாள்வதால் ஏற்படும் நன்மைகளை விளக்கி விவசாயிகளை ஊக்குவிக்க அமைக்கப்படும் இந் நிரூபணங்கள் வெற்றிக்கு வழிகாட்டும் என்பது உறுதி. இந்த தேசிய நிரூபணங்கள் அந்தந்த வட்டாரங்களில் ஜில்லா விவசாய அலுவலர்களின் பொறுப்பில் நடத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

அகில இந்திய கரும்பு விளைச்சல் போட்டி

1964–65-ம் ஆண்டுக்கான அகில இந்திய பிராந்திய கரும்பு விளைச்சல் போட்டியில் தென் பிராந்தியத்துக்கான குறுகிய கால கரும்பு சாகுபடியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. W. P. A. S. பாஸ்கரன் அவர்களுக்கு மூன்றும் பரிசு அளிக்கப்பட்டுள்ளது. விவரங்கள் பின்வருமாறு:—

பெயரும், முகவரியும். (1)	சாகுபடி செய்த ரகம். (2)	ஹெக்டருக்கு விளைச்சல் (டன்களில்). (3)	பரிசுத் தொகை விவரம். (4)
திரு. W. P. A. S. பாஸ்கரன், சிதரையூர் கிராமம், பட்டிவீரன்பட்டி அஞ்சல், மதுரை மாவட்டம்.	கோ. 449	165–12 ஏக்கருக்கு 65.76 டன்கள்).	மூன்றும் பரிசு ரூ. 1,000 மும் பதக்கமும்.

விவசாயப் பெருமக்கள் அனைவரும் இத்தகைய போட்டிகளில் கலந்துக்கொண்டு பரிசு பெறுவதுடன் உற்பத்தி பெருகவும் வழி செய்ய வேண்டும்.

விவசாயச் செய்திக்கதிர்

K. M. சுந்தரம் R. S. எர்னஸ்ட், விரிவிணைப்பகுதி, விவசாயக் கல்லூரி கோவை.

ஏ.எஸ்.டி. 13 திருநெல்வேலி, கன்னியாகுமரி முதலிய ஜில்லாக்களுக்கு ஏற்ற ஒரு புதுரக நெல்

திருநெல்வேலி கன்னியாகுமரி முதலிய ஜில்லாக்களில் பெரும்பாலும் அரக்கிரவி என்னும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதனுடைய அரிசி சிகப்பு நிறத்தில் இருக்கும். இந்த அரக்கிரவியிலிருந்து உயர் வழித்தேர்வு மூலம் வந்ததுதான் ஏ.எஸ்.டி. 1.. இது மாநில விதைகுழுவின் அங்கிகாரம் பெற்ற பின்பு, ஏ.எஸ்.டி. 13 என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஏ.எஸ்.டி. 13 பிசானம் பருவத்திற்கு (அதாவது அக்டோபர் முதல் மார்ச் மாதம் வரை) பயிரிடுவதற்கு ஏற்ற ஒரு நீண்ட காலப் பயிராகும். இதன் வயது 165 நாட்கள். இது ஏக்கருக்கு 1,358 கிலோ மகசூல் கொடுக்கிறது. அதாவது விவசாயிகள் உபயோகிக்கும் நெல் ரகத்தைவிட ஆராய்ச்சிபண்ணையில் 22 சதவீதமும், விவசாயிகள் பண்ணையில் 12 சதவீதமும் அதிக மகசூல் கொடுத்திருக்கிறது.

திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் தற்பொழுது அரக்கிரவி சாகுபடி செய்யப்படும் 20,000 ஏக்கர் நிலத்திலும் அதற்கு, பதிலாக இந்தப் புதிய ஏ.எஸ்.டி. 13 என்ற புதியரக நெல் சாகுபடிசெய்ய ஏற்றது.

அதிக விளைச்சலை கொடுக்கக்கூடிய விதை ரகங்களை உபயோகித்து அதிக லாபமடையுங்கள்

மகசூல் அதிகம் கொடுக்கக்கூடிய விதை வகைகளை உபயோகிப்பதனால் நிகரலாபத்தை அதிகரிக்கச் செய்யலாம். இது கோவில்பட்டி பிராந்திய ஆராய்ச்சி நிலையத்திற்கு அருகே மூன்று மைல் தொலைவில் உள்ள தீத்தான்குளம் கிராமத்தில் உள்ள திரு. நாகிராஜ் என்பவருடைய பண்ணையில நடத்தப்பட்ட தேசிய விளக்கப் பாத்தி மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்த விளக்கத் திட்டத்தில் ஹெச. பி. 1 கம்பு என்ற அதிக மகசூல் ரக விதை உபயோகிக்கப்பட்டது. இந்தத்திட்டம் 2·5 ஏக்கர் நிலத்தில் நடத்தப்பட்டது. நிலத்தில் ஒரு ஹெக்டருக்கு 12½ டன் கம்போஸ்ட் உரம் போட்டு நாட்டுக்கலப்பையால் பரப்பிவிடப்பட்டது. மழை பெய்தவுடன் ஏக்கருக்கு 40 பவுண்டு (நைட்ரஜன்) தழைச் சத்து, 20 பவுண்டு மணிச் சத்தும் (பாஸ்பாரிக் ஆசிட்) கிடைக்கும் வகையில் முறையே 99 கிலோ யூரியா, 142 கிலோ சூப்பர் பாஸ்பேட் முதலிய இரசாயன உரங்கள் 7-10-65-ல் போடப்பட்டன. 6 கிலோ கே. 1 கம்பு விதை இரண்டு ஏக்கரிலும் 0.8 கிலோ எக்ஸ். 3 கம்பு விதை 0·25 ஏக்கரிலும் 0·4 கிலோ ஹெச் பி. 1 கம்பு விதை 0·25 ஏக்கரிலும், விதைக்கப்பட்டன. நான்கு வாரங்களுக்குப் பிறகு 18" × 6" இடைவெளி விட்டு பயிரடிக்கப்பட்டது. ஒருமுறை களையெடுக்கப்பட்டது. ஒரு வாரம் கழித்த பின்னர், ஒரு மழைபெய்தவுடன் நாட்டுக்கலப்பையால் ஒருமுறை பின்நேர்த்தி செய்யப்பட்டது. இதற்கு விவசாயிகள் பயிர் உழவு என்று சொல்வார்கள். பயிர் 85–90 நாட்களில் அறுவடைக்குத் தயாரானது. ஹெச். பி. 1 கம்பு மற்ற இரண்டு கம்பு ரகங்களைவிட நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு முன்னதாகவே அறுவடைக்கு வந்தது துரதிர்ஷ்டவசமாக கடைசியில் பயிர் கம்பு சொரி (கம்பு ரஸ்ட்) நோயால் தாக்கப்பட்டு பயிர் மிகவும் பாதிக்கப்பட்டது. ஜனவரி 19, 20 தேதிகளில் பயிர் அறுவடை செய்யப்பட்டது.

சுத்தம் செய்து காய வைத்த பின்னர் ஒரு ஹெக்டருக்கு ஹெச். பி. 1 கம்பு 1,260 கிலோவும், கே. 1 கம்பு 1,170 கிலோவும், எக்ஸ், 3 கம்பு 919 கிலோவும் மகசூல் கொடுத்தன. நோய் தாக்குதல் அதிக அளவு இருந்த போதிலும் ஒரு ஹெக்டருக்கு நிகர லாபம் ரூபாய் 444/410/225 முறையே ஹெச். பி. 1 கம்பு, கே. 1 கம்பு, எக்ஸ். 3 கம்பு முதலியவற்றிலிருந்து கிடைத்தன. இதன் மூலம் அதிக மகசூல் கொடுக்கும் ஹெச். பி. 1 கம்பு நோய்த் தாக்குதல் அதிகமாக இருந்தபோதிலும் எவ்வாறு மற்ற கம்புரகங்களைக் காட்டிலும அதிக மக்சூல் கொடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது. சாதாரணமாக இந்தக் கம்பு மேற்கண்ட முறையில் கோயம்புத்தூரில் விளக்க முறை பாத்தி நடத்தியதில் ஒரு ஹெக்டருக்கு ரூ. 2,260 வரை நிகரலாபம் கொடுத்திருக்கின்றது.

நவீன சாகுபடி முறைகளைக் கையாண்டு அதிக லாபமடையுங்கள்

பொறுக்கு விதைகளை உபயோகிப்பதாலும், தகுந்த அளவு உரமிடுவதாலும், விவசாய இலாக்காவில் சிபாரிசு செய்யப்படும் சாகுபடி முறைகளைக் கையாளுவதாலும் அதிக லாபமடையலாம் என்பதற்கு மற்றொரு உதாரணம் இதோ! கோவில்பட்டி விவசாய நிலையத்திலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ள நலாட்டின புதூரில் திரு. R. P. ஆழ்வாரப்பன் என்பவருடைய நிலத்தில் நடத்தப்பட்ட தேசிய விளக்கப்பாத்தி முறை மேற்கண்ட உண்மையை மேலும் உறுதிப்படுத்துகிறது.

நாற்றங்காலுக்காக 10 செண்ட் நிலம் நன்றாகப் பண்படுத்தப்பட்டு, 2 டன் கம்போஸ்ட் உரமும், 0.5 டன் சாம்பலும் போடப்பட்டு, மண்ணில் நன்றாகக் கலக்கி விடப்பட்டது. 5 கிலோ ராகி விதையுடன் அக்ரசான் மருந்து கலந்து (ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து

வீதம்) நாற்றுக்கள் அதிகமாக முற்றி விடாமலிருக்க 16–8–65; 22–8–65 ஆகிய இரண்டு நாட்களில் விதைக்கப் பட்டது. 28–8–65-ல் ஒரு பவுண்டு பைட்டாலான் மருந்துடன் 20 காலன் தண்ணீர் கலந்து நாற்றங்காலில் தெளிக்கப்பட்டது. நாற்றுகள் ஒரே மாதிரியாக பூச்சி, நோய் தாக்குதலின்றி நன்ருக வளர்ந்திருந்தன. இந்த நாற்றுக்கள் ஒரு ஹெக்டர் பரப்பளவில் (2.47 எக்கர்) செப்டம்பர் மாதம் 7, 8, 9 10, 12, 14, 15, 16 ஆகிய தேதிகளில் (8 நாட்கள்) நடப்பட்டன. நடுவதற்கு முன்னர் நாற்றுக்களின் நுனி இலைகளைக் கிள்ளி எறிந்துவிட்டு நாற்றுகள் தண்ணீரில் கலந்த பைட்டலான் மருந்தில் முக்கி எடுக்கப்பட்டன.

நடவு பூமியை நன்ருகப் பண்படுத்த நான்கு முறை நாட்டுக்கலப்பையால் உழப்பட்டது. ஆரம்பத்திலேயே ஒரு ஹெக்டருக்கு 25 டன் வீதம் கம்போஸ்ட் உரமிட்டு நன்ருக மண்ணுடன் கலக்கப்பட்டது. பின்னர் நடவு பூமியில் பாத்திகட்டி, வாய்க்கால்கள் அமைக்கப்பட்டன. நடவு நாளன்று ஒரு எக்கருக்கு 30 பவுண்டு தழைச் சத்தும், 30 பவுண்டு மணிச்சத்தும், 20 பவுண்டு சாம்பல் சத்தும் கிடைப்பதற்காக முறையே அம்மோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட், மியூரேட் ஆப் பொட்டாஷ் முதலிய ரசாயன உரங்கள் நடவு பூமியில் இடப்பட்டன. எக்கருக்கு 30 பவுண்டு வீதம் தழைச்சத்து கிடைக்க இரண்டாவது முறையாக அம்மோனியம் சல்பேட் பயிர்களின் வரிசைகளுக்கிடையில் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதியில் போடப்பட்டு களையெடுக்கப்பட்டது. நடவுநாளன்று நீர்பாய்ச்சியது தவிர பயிருக்கு நான்குமுறை நீர்பாய்ச்சப்பட்டது. என்டிரின் (0.02 சதவீதம்), பைட்லான் (1 பவுண்டு மருந்தை 15 காலன் தண்ணீரில் கலந்து) முதலிய மருந்துகள் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் 20-ம் முதலிய தேதிகளில் முன்னெச்சரிக்கையாக, தெளிக்கப்பட்டன. சுண்ணும்பு கலந்த செரஸான்தூள் மருந்து 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம் தேதியில் கொள்ளை நோயைத் தடுக்க தெளிக்கப்பட்டது. 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ம் தேதியும் 1965–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆகிய தேதிகளில் பயிர் அறுவடை செய்யப்பட்டது. பயிர் மிகவும் நன்ருக இருந்தது. மகசூலும் ஹெக்டருக்கு 4,000 கிலோவிற்கு மேல் எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் துரதிர்ஷ்டவசமாக, பயிர் பூக்க ஆரம்பித்த பொழுதும் கதிர் முற்ற ஆரம்பித்த காலத்திலும், காலநிலை சரியில்லாததாலும், தொடர்ந்து மழை பெய்ததாலும் கதிர்களில் எதிர்பார்த்த அளவு தானியம் உண்டாகவில்லை. கொள்ளைநோய் தாக்குதலும் அதிக அளவில் இருந்தது. மகசூலும் எதிர்பார்த்ததைவிட மிகவும் குறைவாகவே கிடைத்தது. தானியத்தை நன்ருக காயவைத்த பின்னர் எடை 2,150 கிலோதான் இருந்தது. மகசூல் சராசரி மகசூலைவிடக் குறைவாக இருந்தாலும் அந்த மகசூல்தான் அந்தக் கிராமத்தில் அந்த பருவத்தில் மற்ற விவசாயிகளின் நிலத்திலிருந்து கிடைத்த மகசூலைவிட அதிகமாக இருந்தது. காலநிலை சரியில்லாமல் இருந்தபோதிலும், நோய் தாக்குதல் இருந்த போதிலும், நவீன சாகுபடி முறைகளைக் கையாண்டதால் அதாவது பொறுக்கு விதை உபயோகம், வேண்டிய அளவு உரமிடுதல், பயிர்பாதுகாப்பு முறைகளைக் கையாளுதல், தக்க சமயத்தில் பயிரிடுதல் ஆகிய வற்றைக் கையாண்டதால்தான் தாங்கள் அடைந்த மகசூலை விட விளக்கப்பாத்தியில் அதிக மகசூல் கிடைத்தது என்பதை விவசாயிகள் நன்ருக அறிந்து கொண்டார்கள். பருவநிலை சரியாக இல்லாமலிருந்தபோதிலும், விளக்கப் பாத்திப் பயிரிலிருந்து ஒரு ஹெக்டருக்கு ரூ. 1,035 நிகரலாபம் அதாவது ஒரு எக்கருக்கு ரூ. 414 நிகரலாபம் கிடைத்தது.

மானுவாரிப் பருத்திக்குத் தழைச்சத்து

பொதுவாக மானுவாரியாகப் பயிர் செய்யப்படும் பருத்திக்கு உரமிடுதல் பழக்கத்திலில்லை. ஆனல் மானுவாரிப் பருத்திக்கு ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் அடியுரமாகப்போட்டு பின்னர் 20 பவுண்டு நைட்ரஜன் (தழைச்சத்து) அம்மோனியம் சல்பேட்டாகப் போட்டதில் 11,3 சதவீதம் அதிக மகசூல் கிடைக்கிறது என்று கோவில்பட்டியின் கரிசல் பூமியில் நடத்திய பரிசோதனைகளிலிருந்து தெரிகிறது.

ஏ.டி.டீ. 1 உளுந்து நஞ்சை நிலங்களில் சாகுபடி செய்வதற்கேற்ற ஒரு புதுவகை உளுந்து

நஞ்சை நிலங்களில் சாகுபடி செய்யப்படும் ஒரு புது வகை உளுந்து (நெ. 15) ஏ.டி.டீ. 1 என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கிறது. இது உயர்வழி தேர்வு முறையினல் ஆடுதுறையிலுள்ள ஒரு உளுந்து வகையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது. இதனுடைய வயது 90 நாட்கள். இது எக்கருக்கு 376 கிலோ உளுந்து கொடுக்கிறது. இந்த மகசூல் சாதாரண உளுந்திலிருந்து கிடைக்கும் மகசூலை விட 11 சதவீதம் அதிகமாகும். இந்த ஏ.டி.டீ. 1 உளுந்து வகையில் 26·34 சதவீத புரதச் சத்து உள்ளது. இந்த உளுந்துச்செடியின் தண்டு ஆங்காங்கே இளச்சிவப்பு நிறம் கொண்ட கரும் பச்சைநிறம் கொண்டது. இந்த உளுந்து புஞ்சை உளுந்தைவிட சிறியதாகவும், உறுதியாகவும் இருக்கிறது. இந்த உளுந்திலிருந்து பருப்பும் அதிகம் கிடைக்கிறது. இதனுடைய பருவகாலம் ஜனவரி–மே மாதங்களாகும். நஞ்சை நிலங்களில் சம்பா அல்லது தாளடி நெல் அறுவடைக்கு ஒரு வாரத்திற்கு முன்பே இந்த உளுந்தை விதைத்துவிடலாம். நிலத்திலுள்ள ஈரத்தினல் விதைகள் முளைக்கின்றன. ஜனவரி–பிப்ரவரி மாதங்களில் காலையில் விழும் பனியினல் பயிர் வளர்ந்து விளைவுக்கு வருகிறது. நெற்பயிர் சாகுபடி செய்யப்படாத ஜனவரி–மே மாதங்களில் விவசாயிகள் இந்த உளுந்தை அந்த நிலத்தில் பயிரிடுவதால் எக்கருக்கு நாற்பத்தைந்து ரூபாய் கிடைக்கிறது. மேலும் நைட்ரஜன் பேக்டீரியா முடிச்சுக்களால் நிலததை வளமாக்குகிறது.

நெல் சாகுபடி அனுபவம்

1964–65-ஆம் ஆண்டு மாநில நெல் விளைச்சல் போட்டியில் அதிக விளைச்சலுக்கான முதல் பரிசு பெற்ற கிழநத்தம் திரு. என். கோபால சீனிவாசன் அவர் தம் சாகுபடி அனுபவத்தைப் படியுங்கள்.

என்னுடைய பெயர் என். கோபால சீனிவாசன். என்னுடைய கிராமம் கிழநத்தம், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தாலுகாவில் தாம்பிரபரணி ஆற்றின் தெற்குக் கரையில் இருக்கிறது. இந்தக் கிராமத்தில் எனக்கு சுமார் 10·00 எக்கர் இருபோக நஞ்சை நிலம் இருக்கிறது. இந்த நிலங்களுக்கு தாம்பிரபரணி ஆற்றிலிருந்து வரும் பாளையங்கால் மூலம் நேரடிப்பாசனம் கிடைக்கிறது. நான் கார் பருவத்தில் சம்பாவும் (அம்பாசமுத்திரம் 1-கார்சம்பா), பிசானத்தில் (கோயம்புத்தூர் 25) பொன்னுருவியும் (அம்பாசமுத்திரம் 5-கார்த்திகை சம்பா) பூம்பாளையும் பயிரிடுவது வழக்கம்.

1964-ம் வருடம் பாளையங்கோட்டை பஞ்சாயத்து யூனியன் விவசாய விஸ்தரிப்பு அலுவலர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நெல் பயிர் அறுவடை போட்டியில் பிசான பருவத்தில் மாநில அளவினும், மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் கலந்து கொண்டேன்.

வளர்த்தவரையே மறைக்கும் அளவுக்கு வளர்ந்திட்ட நெற்பயிர்.

1965-ம் வருடம் மார்ச் மாதம் 17-ம் தேதி மாநில அளவு போட்டி வயலும், 19-ம் தேதி வட்டார அளவு போட்டி வயலும் அறுவடை செய்து கணக்கிடப்பட்டது. 50 செண்டு அறுவடை செய்து கனக்கிட்டதில் எக்கருக்கு 3303·400 கிலோகிராம் அதாவது சுமார் 25·5 கோட்டை நெல் கிடைத்தது. இந்த விளைச்சலுக்குஎனக்கு

என். கோபால்சீனிவாசன்

மாநில முதல் பரிசு கொடுக்கப்பட்டிருக்கிறது, மாவட்ட அளவு முதல் பரிசும், வட்டார அளவு முதல் பரிசும் எனக்குத்தான் கிடைத்தது.

மாநில அளவு முதல் பரிசு பெற்ற வயலை நான் சாகுபடி செய்த முறைகள் பின்வருமாறு;—

1964-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 31-ம் தேதி முதல் செப்டம்பர் மாதம் 9-ம் தேதி வரை நாற்றங்கால் ஆறுமுறை உழவு செய்யப்பட்டது. ஒரு எக்கர் நடுவதற்கு சுமார் 8 முதல் 10 செண்டு நாற்றங்காலில் 20 கிலோ முதல் 25 கிலோ நெல் விதை நாற்று பாவுவது வழக்கம். 8 செண்டு நாற்றங்காலுக்கு 2 வண்டி தொழு உரமும், 10 கிலோ கலப்பு உரம் எண் 1-ம் போட்டு செப்டம்பர் 10-ம் தேதி அக்ரசான் கலந்த கோயம்புத்தூர் (25 பொன்னுருவி,) நெல் விதை நாற்று பாவப்பட்டது.

நடுவதற்கு 10 தினங்களுக்கு முன்பு நாற்றங்காலில் பாலிடாலும் போர்டோ கலவையும் கலந்த மருந்து ஒரு முறை ஸ்பிரேயர் மூலம் அடிக்கப்பட்டது. அக்டோபர் மாதம் 26-ம் தேதி மாவட்ட விவசாய அலுவலரும், விவசாய விஸ்தரிப்பு அதிகாரியும் என்னுடைய நாற்றங்காலைப் பார்வையிட்டார்கள். அப்பொழுது வயல் உழவு நடந்துகொண்டிருந்தது. நான் நாட்டுக் கலப்பையை உபயோகப்படுத்துவதுதான் வழக்கம். இரும்புக் கலப்பையை உபயோகப்படுத்த முடியாது என்று நானும் என்னுடைய நண்பரும் கூறினோம். 'சூப்பர் பாஸ்பேட் உரமும் தொழியில் போடவேண்டும்' என்று கூறினார்கள். அதிலும் எங்களுக்கு நம்பிக்கையில்லாமலிருந்தது. இருந்தாலும் அவர்கள் கூறியதற்கிணங்க பாளையங்கோட்டை விவசாய விஸ்தரிப்பு அலுவலரிடம் இரண்டு இரும்பு கலப்பைகள் வாங்கி உபயோகப்படுத்தினேன். இரும்பு கலப்பைகள் உழவு சுலபமாக இருந்ததோடு எனக்கு செலவில் மிச்சமும் கிடைத்தது. நான் இப்பொழுது இரும்புக் கலப்பைதான் உபயோகப்படுத்துகிறேன். என்னைப் பார்த்து எங்கள் ஊர் விவசாயிகளும் இரும்புக் கலப்பை உபயோகப்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள்.

மாநில அளவுபோட்டி வயல் 65 செண்டு விஸ்தீரணமிருந்தது. வயலை 6 முறை உழுது கொம்புத்தூள் 70 கிலோவும் கலப்பு உரம் எண் 140 கிலோவும், 2 வண்டி தழை உரமும் போட்டு நடுகை செய்யப்பட்டது. நட்ட 60-ம் நாளில் 40 கிலோ அமோனியம் சல்பேட் உரமும் 70-ம் நாளில் கலப்பு உரம் 40 கிலோவும் மேல் உரமாகப் போட்டேன்.

மார்ச் மாதம் 17-ம் தேதி அறுவடை செய்யப்பட்டது.

ஏக்கருக்கு வரவு–செலவு விவரம்.

	ரூ.	பை.
நாற்றங்கால் உழவு 6-க்கு	4	50
தொழு உரம் 2 வண்டி	6	00
கலப்பு உரம் 10 கிலோ	4	50
அக்ரசான்	0	15
நாற்றங்கால் மருந்தடிக்க செலவு	1	00
கோ. 25 விதை, 25 கிலோ	16	25
வயல் உழவு 6-க்கு, 18 ஏர்	54	00
வரப்புத் தறிக்க	8	00
கொம்புத்தூள் மூட்டை 3–க்கு	66	00
கலப்பு உரம் எண் 2, 2 மூட்டை	40	00
தழை உரம் 4 வண்டி	52	00
நடுகையாள் 14–க்கு	14	00
களைபறி ஆள் 13–க்கு	9	75
இரண்டாவது களைபறி ஆள் 20–க்கு	15	00
மருந்தடிக்க	10	00
வரப்பு தறிக்க	8	00
கலப்பு உரம் எண் 2, மூட்டை 2	40	00
அமோனியம் சல்பேட் 80 கிலோ	38	00
மருந்தடிக்க	10	00
வடிகாலுக்கு செலவு..	4	00
அறுவடைச் செலவு	50	00
ஒரு ஏக்கருக்கு செலவு	451	15

	ரூ.	பை.
ஒரு எக்கரில் கிடைத்த நெல் 65 கிலோ கொண்ட மூட்டைகள்	51	
மூட்டை 1-க்கு கிரயம் ரூ. 25.44 விதம் 51 மூட்டைக்கு	1,297	44
சாகுபடிச் செலவு ..	451	15
நிகர லாபம் ஒரு ஏக்கருக்கு ..	846	29

1965-ம் வருடம் விவசாய விஸ்தரிப்பு அலுவலர் என்னுடைய வயலின் மண்ணை கோவில்பட்டி மண் பரிசோதனை சாலைக்கு அனுப்பி, சூப்பர் பாஸ்பேட் உரம் போடவேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார். அதன்படி எக்கருக்கு 100 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரம் உபயோகித்தேன் நாற்றங்காலில் ஒருமுறையும் நட்டவயலில் ஒருமுறையும் பாலிடாலும் போர்டோ கலவை கலந்த மருந்து, இயந்திர மருந்து தெளிக்கும் கருவிமூலம் அடிக்கப்பட்டது. அதனால் சென்ற வருடத்தைவிட இந்த வருடம் 952 கிலோ அதாவது 74 கோட்டை நெல் அதிகமாக விளைந்தது. ஏக்கருக்கு 4255.180 கிலோ அதாவது 323 கோட்டை நெல் கிடைத்தது. எனவே எல்லா விவசாயிகளும் முன்னேற்ற முறைகளை கடைப்பிடித்து விளைச்சலை பெருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தென்னிந்திய சீதோஷ்ணத்துக்குத் தக்கபடி நன்கு பரீக்ஷிக்கப்பட்டு எங்களால் நேரிடையாகத் தயாரிக்கப்பட்ட பலவித உயர்ந்த ஜாதி

முட்டைகோஸ், நூல்கோல், பீட்ரூட், கேரட், காலிப்ளவர், குடமிளகாய்

உலகப் பிரசித்திப்பெற்ற சிறந்த ருசி, குறைந்த விதைக்குழி, பருத்த சதை கொண்ட பலவித கவர்ச்சிகரமான

தக்காளி

மற்றும் இதர வெளிநாட்டு காய்கறி விதைகள், எக்காலத்துக்கும் தகுதியான நோய் அணுகாத, அதிக மகசூல் தரும்மிக உயர்ந்த ஜாதி பச்சை நிற

வெண்டை

பெரிய, சதை பருத்த, ருசிகரமான அதிய ஜாதி

கொத்தவரை

அதிக மகசூல், சிறந்த ருசி, கவர்ச்சி நிறம், வடிவம், குறைந்த விதை முதலிய பல விசேஷ குணங்கள் கொண்ட

கத்தரி ரகங்கள்

இதர பலவித முள்ளங்கி, மிளகாய், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி, கீரை வகைகள், மா, எலுமிச்சை, கொய்யா, சபோடா போன்ற பழச் செடிகள், தென்னை ரகங்கள், பூச்சி மருந்துகள், தோட்டக் கருவிகள், ஸ்ப்ரேயர்கள், களை நாணிகள் முதலிய எல்லாவற்றுக்கும் சிறந்த நம்பிக்கை வாய்ந்த இடம்:

ராஜா பண்ணைத் தோட்டம்

2, வைத்தியராமய்யர் தெரு, (ஹிந்தி பிரசாரசபை அருகில்)
தியாகராயநகர் : : சென்னை-17.

தந்தி : **RAJSEED** போன் : 42262

விற்பனைக்குழுத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் ஆறுவது மாநாடு, தஞ்சாவூர்

K. ஸ்ரீராமன், மாநில வர்த்தக அலுவலர்.

இந்தியா ஒரு விவசாய நாடு. ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் விவசாயத்தை நம்பியே வாழ்கிறார்கள். விவசாயம் வளர்ச்சி பெற்றாலொழிய நாடு முன்னேற முடியாது. விவசாயப் பெருங்குடி மக்கள்பால் அக்கறை உள்ள சர்க்கார், விவசாயிகளின் தேவைகளை அறிந்து அதற்கு ஆவன செய்து வருகிறார்கள். விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதை ஊக்குவிக்க விவசாயிகள் விளைபொருள்களை நல்ல விலைக்கு விற்க வாய்ப்பு இருக்கவேண்டும். இதற்காக 1933-ம் ஆண்டில் விலையை ரகசிய ஏலச்சீட்டின் மூலம் பெறுவதற்கு வழி செய்கிறது. வியாபாரிகள் குறிப்பிட்ட தரத்தை தேவையான அளவுக்கு வாங்குவதற்கு முடிகிறது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் வியாபாரிகள், விவசாயிகள் ஆகிய இருசாராருக்கும் நல்ல பலனை அளித்து வருகிறது. இப்பொழுது மார்க்கெட் கமிட்டி தஞ்சாவூர், திருச்சி, கோவை, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி, தென் ஆற்காடு, வட ஆற்காடு ஜில்லாக்களில் செயல்பட்டு வருகிறது. இம் மாநிலத்தில் 82 ஒழுங்குமுறை



மாநாட்டைத் திறந்துவைத்து உள்துறை, விவசாய அமைச்சர் திரு. P. கக்கன் அவர்கள் உரையாற்றுகிறார்கள். படத்தில் (இ-வ) தஞ்சை கலெக்டர் திரு. C. G. ரங்கபாஷ்யம், தஞ்சை விற்பனைக்குழுத் தலைவர் திரு. கோவிந்தசாமி பிள்ளை, விவசாயத்துறை நெறியானர் திரு. K.V. ராமநாதன், மாநில வர்த்தக அலுவலர் திரு K. ராமன் முதலியோர்.

ஒழுங்குமுறை வர்த்தக சட்டத்தை வாணிபப் பொருள்களுக்கு கொண்டு வந்தது. பிறகு 1959-ம் ஆண்டு இச்சட்டம் விரிவுபடுத்தப்பட்டு எந்த ஒரு விவசாய விளைபொருளையும் இந்த சட்டத்தின்கீழ் குறிப்பிட்டு அதற்கு ஆவன செய்வதற்கு வழிவகுத்தது. இச்சட்டம் ஒரு குறிப்பிட்ட இடத்தில், வியாபார வழக்கங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் முக்கியமான சேகரிக்கும் இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் திறப்பதற்கும் வழி வகுத்திருக்கிறது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் சரியான எடை, லைசென்ஸ் பெற்ற எடையாளர்களால் போடப்படுகிறது கமிஷன் தரகு இல்லாமல், மாதிரி, மகிமை போன் கழிவுகள் இல்லாமல், விவசாயிகள் அதிகப்படியான விற்பனைக்கூடங்கள் திறக்கப்பட்டு திறம்பட செயல்பட்டு வருகின்றன. நாலாவது திட்ட முடிவுக்குள் இந்த ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் இன்னும் 68 முக்கியமான சேகரிக்கும் இடங்களில் திறக்கப்பட விருக்கின்றன. இத்துடன் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் 150 ஆகும். இது மாநிலம் முழுவதும் வியாபாரத்தை ஒருகட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர மிக உதவியாய் இருக்கும்.

மார்க்கெட்டு கமிட்டிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை திறப்பதற்கும், வியாபார பழக்க வழக்கங்களை குறிப்பிட்ட இடத்தில் கட்டுப்படுத்துவதற்கும், 1959-ம்

[16-ம் பக்கம் பார்க்கவும்.

இரண்டு திறமை மிக்க கருவிகள்

பண்ணை வேலைகளில் மேலும் சிறந்த சிக்கனத்திற்கும்,
அதிகமான
விளைச்சல்களுக்கும்

டிராக்டரில் பொருத்தப்பட்ட வட்டமான ஆப்ஸெட் (OFFSET) பரம்புச் சட்டங்கள்

டிராக்டரில் பொருத்தப்பட்ட வட்டமான ஆப்ஸெட் பரம்புச் சட்டங்கள் செப்பனிடப்படாத கரடுமுரடான பாதைகளிலும், பழத்தோட்டங்களிலும் திறந்தவெளி நிலங்களிலும் திறமைமிக்க சேவை அளிப்பதற்கென அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை சிறந்த முறையில் புல்பூண்டுகளை வெட்டி, மண்கட்டிகளை உடைத்து, மண்ணைப் பொடியாக்கி, அதில் காற்றுப் புகும்படியாகச் செய்கின்றன. இவற்றின் தனிப்பட்ட தன்மைகளைப் பாருங்கள்.

1. எல்லாவிதமான பிர்மாண்டமான முப்பொருத்த இணைப்புகளிலும் பொருந்தும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறது. (அது எந்த உருளும் டிராக்டரானாலும் சரி)
2. வளைவுகளில் வெல்டு செய்யப்பட்ட வலுவான எஃகுச் சட்டம்.
3. இறக்குமதி செய்யப்பட்ட, உஷ்ணத்தில் பதனிடப்பட்ட வட்டத்தகடுகள்.
4. நிச்சயமாக ஆழமாக ஊடுருவிச்செல்லும் தன்மை.
5. கரடுமுரடான பூமியில் வளைந்துகொடுப்பதற்கேற்ப இணங்கிவரும் ஸ்ப்ரிங்க் பொருத்தப்பட்ட மேல் இணைப்பு.

மேலும், 14 முதல் 50 ஹார்ஸ் பவர் கொண்ட எந்த டிராக்டருடனும் பொருந்தும் இணைப்பு வகைகளும் கிடைக்கும்.



டிராக்டர்களில் பொருத்தப்பட்ட, நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள் (கல்டிவேடர்ஸ்)

டிராக்டர்களில் பொருத்தப்பட்ட, நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள், இந்தியாவில் பரந்த அளவில் மாறுபட்ட மண்ணின் தன்மைகளுக்கேற்றபடி அமைக்கப்பட்டிருக்கின்றன. லேசான மண்முதல் அடர்த்தியான மண்கள்வரை எல்லா மண்களிலும் உழுவதற்கான பற்பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் வெவ்வேறு மாடல்களில் கிடைக்கும். நீரியல் விசையும் (ஹைட்ராலிக் லிப்டு), மும்பொருத்த இணைப்பும் கொண்ட, 14 முதல் 50 ஹார்ஸ் பவர் கொண்ட உருளும் டிராக்டர்களுக்கேற்ற வெவ்வேறு அளவுகளில் கிடைக்கும்.

முழு விவரங்களுக்கு எழுதுங்கள்:

VOLTAS

வால்டாஸ் லிமிடெட்

எர்த் மூவிங், மைனிங் அண்டு அக்ரிகல்சரல் டிவிஷன்

பம்பாய் • கல்கத்தா • மதராஸ் • புது டில்லி • பெங்களூர்
லக்னோ • கொச்சின் • அஹமதாபாத் • ஸெகந்திராபாத்
பாட்னு • நாக்பூர் • போபால் • சண்டிகர் • ஜெய்பூர்

everest/618Ar/VOL

தேனீக்களுக்கு மற்றுமோர் எதிரி

[ஏ. வி. ரங்கராஜன், டி. சந்தானராமன், பூச்சி இயல் பிரிவு, விவசாயக் கல்லூரி, கோவை-3.]

இந்தியத் தேனீ பல எதிரிகளின் தொல்லைக்கு ஆளாகிறது. அவற்றில் முக்கியமானவை மெழுகுப்புழு' சிகப்பு, கறுப்பு எறும்புகள், மஞ்சள் குளவி, உடல் சாற்றினை உறிஞ்சும் நாவாய்ப் பூச்சி, பல்லி, ஓணான், பறவைகள் ஆகும். இவை ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு வகையில் தேனீக்களின் வாழ்வில் குறுக்கிட்டு அவை தேனைச் சரிவர சேகரிக்கவிடாமல் ஊறு செய்கின்றன. இவை இயற்கையாக மரங்களிலும் பொந்துகளிலும் வாழும் தேனீக் கூட்டங்களைத் தவிர பெட்டிகளில் வளர்க்கப்படும் தேனீக்களையும் பாதிக்கின்றன. இவை தவிர தேனீக்களுக்கு மற்றும் ஒரு எதிரி உண்டு.

பெட்டிகளில் வளர்க்கப்படும் தேனீக்களின் அடைகளில் ப்ருட்டேஷியா ஆரிகல்ஸியா (Protaetia aurichalcea Fo) எனும் ஒரு வண்டு நவம்பரிலிருந்து மே மாதம் வரை காணப்படுகிறது. தேனீக்கள் பல ஆயிரக்கணக்கான மலர்களிலிருந்து அடைகளில் சேகரித்து வைத்திருக்கும் மகரந்தத்தை அது உண்ண தேனீப் பெட்டிகளுக்கு வருகிறது. இந்த வண்டு இயற்கையில் பருத்தி, சோளம், லான்டானு ஆகிய தாவரங்களின் மலர்களின் மகரந்தத்தை உண்டு வாழ்கிறது. இந்தப் பழக்கமே, இந்த வண்டை தேனீக்களின் அடைகளுக்கு இட்டுச் செல்லுகிறது. அடைகளில் பல மலர்களின் மகரந்தங்கள் சேகரித்து வைக்கப்பட்டிருப்பதால் இந்த வண்டிற்கு எளிதில் உணவு கிடைத்துவிடுகிறது. மேலும் அடைகளில் உள்ள மகரந்தம் சிறிது தேனுடன் கலந்து சேமித்து வைக்கப்படுவதால் அது மேலும் ருசி மிக்க உணவாக அமைகிறது. இவ்வாறு அடைகளில் சேமித்து வைக்கப்படும் மகரந்தத்தை இவ்வண்டு பெட்டிகளினுள் புகுந்து எளிதில் உண்டுவிடுமாகுல் தேனீக்கள் தங்களது வளரும் புழுக்களுக்கு தேவையான உணவாகிய மகரந்தத்தை இழக்கின்றன. அத்துடன் அவைகளின் உழைப்பெல்லாம் வீணுகிறது. வண்டின், உடலின் நிறம் கிட்டத்தட்ட அடைகளின் நிறத்தை ஒத்திருப்பதால் சில சமயங்களில் இவ்வண்டு அடைகளில் இருப்பதையே கண்டு பிடிப்பது சிறிது கடினமாக இருக்கும். இந்த வண்டின் உடல் பளப் பளப்பான நிறம். மேல் சிறகுகளில் வெண்ணிற புள்ளிகளும் திட்டுக்களும் காணப்படும். இந்த வண்டின் உடல் கடினமாக இருப்பதால் தேனீக்கள் இதைக் கூட்டிலிருந்து கொட்டி விரட்டவோ அல்லது வேறு எந்த வகையாலும் அப்புறப்படுத்தவோ முடிவதில்லை, எனவே தேனீ வளர்ப்போர் இந்த வண்டை தேனீப் பெட்டிகளுக்குள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பத்து நாட்களுக்கு ஒரு முறை தேனீக்களின் அடைகளில் இந்த வண்டுகள் இருக்கின்றனவா என நன்கு கவனிக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் அவற்றை அடைகளிலிருந்து எடுத்து அப்புறப்படுத்தி கொல்லவேண்டும். இதன் மூலம் இந்த வண்டினுல் தேனீக்களுக்கு தொல்லை வராமல் தடுக்கலாம்.

14-ம் பக்கத் தொடர்ச்சி.

ஆண்டு விவசாய விளைபொருள் சட்டத்தின்கீழ் முழுப் பொறுப்பு உள்ளவர்கள். அவர்களிடையே தோன்றும், ஆட்சிமுறை கஷ்டங்களையும் இச்சட்டத்தை நல்ல முறையில் அமுல் நடத்துவதற்கும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் நல்ல முறையில் செயல்பட ஆக்கமுறைகளைத் தேடவும், ஒருமாநாடு கூடி விவாதித்து பலருடைய அனுபவ பூர்வமான யோசனைகளைக் கேட்டு தீர்மானித்து வருங்கால், மிகவும் உபயோகமாக இருக்கும். இம்மாநிலத்தில் விற்பனைக்குழு தலைவர்கள், துணைத் தலைவர்கள் ஆருவது மாநாடு அண்மையில் தஞ்சையில் மே 1, 2-ம் தேதிகளில் நடைபெற்றது. கனம் உள்துறை விவசாய மந்திரி ஸ்ரீ பி. கக்கன் அவர்கள் இம்மாநாட்டை திறந்து வைத்தார். அவ்வமயம் விவசாய இலாக்கா இயக்குநர் ஸ்ரீ கே. வி. ராமநாதன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமை தாங்கினுர். இம்மாநாடு விவசாய வளர்ச்சிக்கு பெரும் அளவில் உதவும் என நம்புவதாக விவசாய மந்திரி தெரிவித்தார். இம் மாநாடு பல பிரச்னைகளையும் ஆராய்ந்து பல தீர்மானங்களை நிறைவேற்றியது.

தமிழ் நாட்டில் கோயம்புத்தூர், வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம், கன்யாகுமரி முதலிய மாவட்டங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு நன்முறையில் செயல்பட்டு வருகின்றது. இவ்வாருக தமிழகத்தில் மொத்தம் 82 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், நெல், பருத்தி, வேர்கடலை, கரும்பு, வெல்லம், முந்திரி, எள், புகையிலை, மஞ்சள், மிளகாய் போன்ற விவசாயப் பொருட்கள் விற்பனைக்காக அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. நான்காவது ஐந்தாண்டு திட்டக்காலத்திற்குள் தமிழக முழுவதிலும் 150 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் திறக்கப்படும்.

அதிக விளைச்சலைத் தரும் வீரியச்சோளம் சி.எஸ்.எச்.1.

[க. செ. தங்கமுத்து, பி.ஏ., எம்.எஸ்.ஸி. (வேளாண்மை), உதவி ஆசிரியர், உழவியல் பிரிவு, கோயமுத்தூர்-3.]

வேளாண்மை :

திரு. செங்காளியப்பருக்குச் சொந்தமான பண்ணை கோவையிலிருந்து 4 மைல் தொலைவில் க்ணபதியில் அமைந்துள்ளது. இப்பண்ணையில் காணப்படும் மண் கரிசல் மண். ஆண்டுதோறும் குளத்து வண்டலையும், தொழு எருவையும், மக்கு குப்பையும் (Compost) போட்டு மண் வளமுள்ளதாகவும், இருபொறை மண்ணாக வும் (Loamy soil) ஆக்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தில் வீரியச் சோளத்தையும், கோ. 18 சோளத்தையும் பக்கம் பக்கமாக, ஒவ்வொரு எக்கரில் போட்டு விளைச்சல் ஒத்துப் பார்க்கப்பட்டது. நிலம் இரண்டு முறை உழப்பட்டு 70 வண்டிகள் தொழு உரம் அளிக்கப்பட்டது. இதற்குப்பிறகு மூன்றாவது முறை நிலம் உழப்பட்டு எரு கலக்கப்பட்டது. அத்தோடு 30 இராத்தல் மணிச்சத்து அளிக்கும் வகையில் 180 இராத்தல் சூப்பர்பாஸ்பேட் விதைப்பிற்கு முன்பு அளிக்கப்பட்டது. விதை வரிசையில் 6 அங்குலம் இடைவெளியிடப்பட்டு விதைக்கப்பட்டது. வரிசைக்கு வரிசை விடப்பட்ட இடைவெளி $1\frac{1}{2}$ அடியாகும். விதைப்பு முடிந்தவுடன் நீர்ப்பாசனம் அளிக்கப்பட்டது. வீரியச்சோளம் விதைப்பதற்குத் தேவைப்பட்ட அளவு எக்கருக்கு 5 கிலோ. 1965-ம் ஆண்டு பிப்ரவரி 27-ம் நாள் விதை விதைக்கப்பட்டது. இதே நாளில் கோ. 18 சோளமும், மேற்குறிப்பிட்டவாறு

விளைச்சலைப் பெருக்கும்வண்ணம் விளைந்திட்ட சோளக்கதிர்கள் (வீரிய சோளம் சி.எஸ்.எச். 1.)

பண்படுத்தப்பட்ட நிலையில் மேற்குறிப்பிட்ட உர அளவினோடும் விதைக்கப்பட்டது.

பயிர் வளரும் நிலத்தில் வளரும் களைகளைக் களைய இரு முறை களையெடுப்பு செய்யப்பட்டது. விதைப்புக்குப் பின்னர் மூன்று வாரங்கள் கழித்து ஒரு களைக்கொத்து செய்யப்பட்டது. பின்னர் ஒரு வாரங்கழித்து அடுத்ததாகக் களைகொத்தப்பட்டது. இந்தச் சமயம் நெருங்கி வளர்ந்திருந்த செடிகளைக் கலைத்து 6 அங்குலத்திற்கு ஒரு செடி இருக்குமாறு "கலைப்பு" (Thinning) செய்யப்பட்டது. பயிர் விதைத்த ஒரு மாதத்தில் 40 இராத்தல் தழைச்சத்து கிடைக்கும் வகையில் 200 இராத்தல் அமோனியம் சல்பேட் இடப்பட்டது. பின்னர் நிலம் மண்வெட்டியால் கொத்தப்பட்டு மண் அணைக்கப்பட்டது. இதேபோல் கோ. 18 சோளத்திற்கும் உரம் அளிக்கப்பட்டது.

நீர்ப் பாசனம் :

பயிருக்கு மொத்தமாக 5 முறை நீர்ப் பாசனம் அளிக்கப்பட்டது. மழை நீரும் பயிருக்கு உதவியாக இருந்ததால் 8 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விடப்பட்டது.

பயிர்ப் பாதுகாப்பு :

பூச்சிகளிடமிருந்து பயிரைக் காக்க வீரியச் சோளத்திற்கு ஒரு முறை பி.எச்.சி. 10 சதவிகிதத்தூள் தூவப்பட்டது. கோ. 18 சோளத்திற்கு இரண்டு முறை இத்தூள் தூவப்பட்டது. கோ. 18 சோளத்தின் கதிர் உருண்டு இறுகி இருப்பதால் பூச்சிகள் உள்ளே தங்கவும், மழை நீர் தங்குவதால் முளைத்துவிடவும் வாய்ப்பேற்படுகின்றது. ஆனால் சி.எஸ்.எச். 1 சோளத்தில் கதிர் திரட்சிகொண்டு நீண்டு 9 முதல் 12 அங்குல நீளத்தில் விளங்குகின்றது. கதிர் இறுக்கமற்றிருப்பதால் கோ. 18 போல் பாதிக்கப்படுவதில்லை.

விளைவும் அறுவடையும் :

வீரியச் சோளமும், கோ. 18 சோளமும் ஒரே சமயத்தில் விதைக்கப்பட்டு வளர்க்கப்பட்டது. கோ. 18 சோளம் ஓங்கி, உயர்ந்து வளர்ந்து 7½ அடி உயரத்தில் காணப்பட்டது. ஆனால் வீரியச் சோளம் 3 அடி அளவாக வளர்ந்துக் காணப்பட்டது. வீரியச் சோளம், கோ. 18 ஆகியவற்றில் உள்ள மொத்தக் கணுக்கள், கணுக்களின் அருகில் உள்ள இலைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை சமமானதேயாகும். ஆனால் அவற்றின் கணு இடைவெளி (Internode) வீரியச் சோளத்தில் குறைவாகவும், கோ. 18-ல் நீண்டும் உள்ளது. இதுவே வீரியச் சோளத்தில் சற்று குறைவான சோளத்தட்டை விளைச்சலுக்கு காரணமாகும். கோ. 18 சோளம் கதிர் முற்றும் காலத்தில் காய்ந்துவிட்டது. அச்சமயம் காற்றுடன் கூடிய மழை பெய்ததால் பயிர் சாய்ந்துவிட்டது. ஆனால் சி.எஸ்.எச். 1 சாயவில்லை. இது வீரியச் சோளத்திற்குள்ள சிறப்புத் தன்மையாகும்.

பயிர் வளர்ந்து கதிர் முதிர்ந்த நிலையில் அறுவடை செய்யப்பட்டது.

விளைவு	வீரியச் சோளம் ஏக்கருக்கு.	கோ. 18 சோளம் ஏக்கருக்கு.
1. தானியம்	5,400 இராத்தல்	2,880 இராத்தல்
2. சோளத் தட்டை.	3,000 ,,	8,000 ,,
	வருமானம்.	
1. தானியம்	... ரூ. 1,500	ரூ. 800
2. தட்டை	.. ரூ. 120	ரூ. 320
	ரூ. 1,620	ரூ. 1,120

கோ. 18 சோளத்தை விட வீரியச் சோளத்தால் மொத்த வருமானம் ரூ. 500 கூடுதலாகும். இவ்வளவு குறுகிய காலத்தில் (95 நாட்கள்) கிடைக்கும் இந்த 500 ரூபாய் கூடுதல் வருமானம் விவசாயிகள் எல்லாரையும் கவரும் என்பது உறுதி.

உணவு-விவசாயம் பற்றிய மகாத்மா காந்தி அவர்களின் புத்தகங்கள்.

உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கான பல்வேறு நடவடிக்கைகளில் நாடு முழுவதும் ஈடுபட்டுள்ளது. இந்த நற்பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் படித்து பயன் பெறத்தக்க வகையில், உணவுப் பிரச்னை பற்றிய அண்ணல் காந்தி அவர்களின் கருத்துகள் கீழ்கண்ட புத்தகங்களாக வெளியிடப்பட்டுள்ளன.

பெயர்	விலை ரூ.பை.
1. Co-operative Farming (கூட்டுறவு விவசாயம்).	0.20
2. India's Food Problem (இந்தியாவின் உணவுப் பிரச்னை)	0.40
3. Food Shortage and Agriculture (உணவுப் பற்றுக்குறையும் விவசாயமும்)	2.50
4. Village Swaraj (கிராம சுயராஜ்யம்)	3.00

இந்திய மக்கள் அனைவரும் இப்புத்தகங்களை படித்துப் பயன்பெறும் வகையில் எளிய ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

உங்கள் தேவைக்கும், பிற விவரங்களுக்கும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்:—

The Managing Trustee,
Navajivan Trusts,
P.O. Navajivan,
Ahmedabad-14.

கூப்பர் டீசல் இன்ஜின்களின்
பல்வேறு உபயோகங்கள்.
கூப்பர் டீசல் இன்ஜின்களை, அவை நீர் இறைப்பதற்கு உபயோ
கிக்கப்படாதபோது, மாவு அரைப்பது, எண்ணெய் எடுப்பது,
மரம் அறுப்பதுபோன்ற மற்றும் இதர வேலைகளுக்குச்
சுலபமாக உபயோகிக்க முடியும். விவசாயத்திற்கு இது
மிகவும் உதவுகிறது.
இதர விசேஷ அம்சங்களாவன:
* வலுவானது மற்றும் சிக்கனமானது—
இலேசான டீசல் எண்ணெயில் ஓடுகிறது.
* ஓட்டுவது சுலபம்.
* உபரி உறுப்புகள் ஏராளமாகக் கிடைக்கின்றன.
* "கூப்பரால் ஒப்பப்பட்ட" சேவை உடனேயே
விநியோகஸ்தர்கள் மூலம் கிடைக்கிறது.
* நீர்ப்பாசனத்திற்குத் தவிர பலவிதங்களிலும்
உபயோகப்படுகிறது.
* ஒரு வருட உத்திரவாதம்.
கூப்பர் CR 8, CR 14, CR 19, CR 26
மற்றும் CR 40 இன்ஜின்கள் 8 லிருந்து 40 BHP வரை
தயாராகக் கிடைக்கின்றன.
கூப்பர்
டீசல் இஞ்ஜின்
இதை வைத்
திருப்பவரிடம்
இதைப்பற்றிக்
கேளுங்கள்.
CE. 828A TAM
WALCHAND
COOPER
GROUP
கூப்பர்
இன்ஜினீயரிங் லிட்.
விற்பனைப் பகுதி:
டெக்கான் ஜிம்கானா,
பூனா—4, மஹாராஸ்டிர.

கேள்வியும் பதிலும்

விஸ்தரிப்பு பகுதி

[விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக இந்தப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கங்கள் பெறலாம். ள் விகளை தெளிவாக எழுதி, தங்கள் முகவரியுடன் ''மேழிச்செல்வம், கேள்வியும் பதிலும்'' விஸ்தரிப்பு நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோயமுத்தூர்-3, என்ற முகவரிக்கு அனுப்பவும். கேள்விகளுக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும்—ஆசிரியர்.]

கே: சி.எஸ்.எச். 1 இறவைச் சோளம் சாகுபடி செய்ய விரும்புகிறேன். இச் சோளம் கிடைக்குமிடம், சாகுபடி செய்யும் காலம், முறை ஆகியவற்றைக் குறித்து மேழிச்செல்வம் கேள்வியும் பதிலில் தெரிவியுங்கள்.

(கோ. புருடோர்த்தமன், அழகுசேனையூர்,
வட ஆற்காடு மாவட்டம்.)

ப: விவசாயத்துறையில் இவ்விதை விவசாயிகளுக்கு விற்பனை செய்ய உற்பத்தி செய்யப்படுவதில்லை. விதை கார்பரேஷன் மூலம் சி.எஸ்.எச். 1 சோளத்தை பெருக்கி விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இப்போது இச்சோளம் உற்பத்தியாளரும் விற்பனையாளருமான ஒரு சிலரிடம்தான் இருக்கிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ளவர்களில் ஒருவரிடமிருந்து விதையைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கோயம்புத்தூர் விதை கார்பரேஷன், பேரூர் அஞ்சல், கோயம்புத்தூர்–10.

2. எஸ்ஸெம்பி. விதை உற்பத்திப் பண்ணை, சிங்கராம்பாளையம் அஞ்சல், கிணத்துக்கடவு (வழி), கோவை மாவட்டம்.

3. டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி, உர இலாகா. கோயம்புத்தூர்–1.

சி.எஸ்.எச். 1 சோளம் சாகுபடிக் குறிப்புகள்

சி.எஸ்.எச் 1 சோளம் கோடைக்கால இறைவைப் பயிராகப் பயிர் செய்ய ஏற்றது.

நிலத்தயாரிப்பு.—நிலத்தை நன்கு உழுது புழுதியாக்கி 10 டன் தொழு உரம் அல்லது கம்போஸ்டு உரமிடவும். 18 அங்குல இடைவெளியுள்ள சால்கள் பிடிக்கவும்.

விதைப்பு.—எக்கருக்கு 5 கிலோ விதை போதுமானதாகும். விதையை சாலில் விதைக்கவும். விதை 3அங்குலம் இடைவெளி வரும்படி மண்ணில் 1 அங்குலம் முதல் $1\frac{1}{2}$ அங்குலம் ஆழத்திற்கு கீழே போகாதபடி போட்டு மண்ணை மூடி தண்ணீர் பாய்ச்சவும்.

தண்ணீர்.—விதைத்த உடன் தண்ணீர் பாய்ச்சவும். பின் 3 அல்லது 4 நாட்கள் கழித்து இரண்டாவது தண்ணீர் பாய்ச்சவும். அதன்பின் நி[illegible]த்திற்கு தகுந்தவாறு 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சவும்.

பின்செய்நேர்த்தி.—விதைத்து 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் பின் ஒருவாரம் கழித்து ஒரு முறையும் பயிருக்குப் பயிர் 6 அங்குலம் இடைவெளியுள்ளதாக பயிரைக் கலைத்து விடவும். 20-லிருந்து 25 நாட்களில் கொத்துக் களையெடுக்கவும். சால்களில் விதைத்திருந்தால் 35—40 நாட்களில் மண் அணைக்கவேண்டும்.

உரம்.—எக்கருக்கு சி.எஸ்.எச். 1 சோளத்திற்கு 60 ராத்தல் தழைச்சத்தும் 30 ராத்தல் மணிச்சத்தும் இடவேண்டும். விதைக்கும் முன்பே 150 ராத்தல் சூப்பர் பாஸ்பேட்டையும் 150 ராத்தல் அம்மோனியம் சல்பேட்டையும் இடவேண்டும். விதைத்த பின் ஒருமாதம் கழித்து 150 ராத்தல் அம்மோனியம் சல்பேட்டை மண் அணைக்கும்போது இடவேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு.—சோளத்தைத் தாக்கும் நோய், பூச்சிகளைத் தடுக்க கீழ்க்கண்டபடி பயிர்ப் பாதுகாப்பு செய்யவும்:—

1. சோளத்தில் விழும் ஈயைத் தடுக்க ஒரு காலன் தண்ணீரில் 3 கன செண்டிமீட்டர் எண்டிரின், 2 கன செண்டிமீட்டர் மெட்டாசிஸ்டாக்ஸ் என்ற மருந்தும் கலந்த கலவையை விதைத்து 10 நாட்களில் ஒரு முறையும் 17 நாட்களில் ஒரு முறையும் தெளிக்க வேண்டும்.

2. குருத்துப் புழுவைத் தடுக்க எண்டிரின் குருணை மருந்தை விதைத்து 22 நாட்களுக்குப் பின் குருத்துக்

களில் தூவவும். மறுபடியும் குருத்துப் புழு விழுந்தால் ஒரு வாரம் கழித்து மறுமுறையும் எண்டிரின் குருனே மருந்தை குருத்துகளில் தூவவும்.

3. சிவப்புப் பேனே (சிலந்தியை) தடுக்க தண்ணீரில் கரையும் கந்தகத்தை ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் தெளிக்கவும்.

4. கதிர் நாவாய்ப் பூச்சி, கதிர்புழு, முதலியவற்றைத் தடுக்க பி.எச்.சி. 10% தூளேயும் டி.டி.டி. 5% தூளேயும் சம விகிதத்தில் கலந்து கதிர் வாங்கும் தருணத்தில் ஒரு முறையும், அதன் பின் 10 நாட்கள் கழித்து ஒரு முறையும் தூவவும்.

பின் குறிப்பு.—சி.எஸ்.எச். சோளத்தின் வயது 90 நாட்கள். ஏக்கருக்கு 2,500 முதல் 3,000 கிலோ தானிய மகசூல் எடுக்கலாம். வீரிய ஒட்டு விதையாதலால் பயிரிலிருந்து எடுக்கும் மகசூலே விதைக்கு உபயோகிக்கக் கூடாது.

கே: மேழிச்செல்வத்திற்கு நாங்கள் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுத வேண்டுமானுல் என்ன முகவரிக்கு எழுதவேண்டும்? தயவுடன் இந்த மேழிச் செல்வத்தின் முகவரியை தெரிவிக்குமாறு பணிவுடன் கோருகிறேன்.

(திரு. டி. **பத்மநாபன்**, விதூர், தென்னுற்காடு மாவட்டம்)

ப: மேழிச் செல்வத்திற்கு தனிப்பட்ட முறையில் எழுத வேண்டுமானுல் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.
"விவசாய செய்தி அலுவலர்,
36-பி, மவுண்ட் ரோடு, சென்னை-2."

கே: எங்கட்கு மேழிச் செல்வம் 8-**ஆம்** தேதி கிடைப்பதால் வானொலிச் செய்தியால் பூரண பலன் கிடைக்கவில்லை. விரைவில் கிடைக்க நாங்கள் யாருக்கு விண்ணப்பிக்கவேண்டும்?

டி. **பத்மநாபன்**, **விதூர்**, தென்னுற்காடு மாவட்டம்

ப: கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளே விவசாயிகள் கேட்டுப் பயன்பெறும் முறையில், விவசாய நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்களே முன்கூட்டியே வெளியிட தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கே: சிவல் நிலம் 1 ஏக்கரில் மிளகாய் நாற்று நட்டிய பின் எத்தனே நாட்கள் கழித்து அது நன்கு அடர்த்தியாக வளர்வதற்கு இராசயன உரம் என்ன இடவேண்டும்? உரமிட்ட பின்பு எத்தனை நாட்கள் கழித்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும்? மிளகாய் செடி நட்டியதிலிருந்து எத்தனை மாதங்களுக்கு இராசயன உரம் என்ன இட வேண்டும்? செடியில் பழுப்பு நிறம் நோய் இருந்தால் இராசயன மருந்து என்ன உபயோகிக்க வேண்டும்? அதன் அளவுகளேயும் தெரியப்படுத்தவும். இலைகள் சுருட்டை (நோய்) ஏற்பட்டால் அதற்கு என்ன இராசயன மருந்து உபயோகப்படுத்த வேண்டும்? அதன் அளவுகளேத் தெரியப்படுத்தவும்.

(**வீ. சேதுராஜ்**, வெம்பூர், கோவில்பட்டி.)

ப: மிளகாய்க்கு ஒரு ஏக்கருக்கு சுமார் 10 டன் தொழு உரமோ அல்லது கம்போஸ்ட் உரமோ அல்லது 4,500 ஆட்டுக்கிடை வைத்து, பின் 200 கிலோ சூப்பர் பாஸ்பேட்டையும் 25 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாசையும் நிலம் பண்படுத்தும் கடைசி உழவு முன் போட்டு உழுது விடவும். மிளகாய்ச் செடி நட்டு 50 நாட்கள் கழித்து 70 கிலோ அம்மோனியம் சல்பேட்டையும், பிறகு 20 நாட்கள் கழித்து 70 கிலோ அம்மோனியம் சல்பேட்டையும் இடவேண்டும்.

மிளகாய்ச் செடிக்குதண்ணீர் பாய்ச்சுவது நிலத்தின் தன்மையைப் பொருத்தது. இரசாயன உரமிட்ட பின் தண்ணீர் விடுவதும் நிலத்தின் தன்மையையும் பூமியின் ஈரத்தையும் பொருத்துள்ளது. பொதுவாக இராசயன உரமிட்ட பின் செடி வாட ஆரம்பிக்கும் தருணத்தில் தண்ணீர் விடவேண்டும்.

பயிர் பாதுகாப்பு.—1. **சுருட்டைப்பூச்சி (Thrips)** நாற்றங்காலிலும், நட்ட பயிரிலும் இலைகளேப் பாதித்து சுருட்டை விழச் செய்கிறது. இதனுல் பூ, மொட்டுகள் உதிர்ந்து விடுகின்றன.

இதைக் கட்டுப்படுத்த பி.எச்.சி. 10% தூளே தூவவும் அல்லது பி.எச்.சி. 50% மருந்தை தண்ணீரில் கரைத்து தெளிக்கவும்.

2. **நுனி பழம் அழுகல் நோய்**.—பாதிக்கப்பட்ட செடிகள் நுனியிலிருந்து கருகிக்கொண்டு வந்து பெருமளவில் பட்டு விடுகிறது. பழம் அழுகி வெள்ளே நிறமாகி விடுகிறது.

இந்நோயைத் தடுக்க, 1. வியாதியால் பாதிக்கப்படாத செடிகளிலிருந்து எடுத்த விதையை உபயோகப்படுத்த வேண்டும். 2. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட 1 ராத்தல் விதையுடன் 1 கிராம் அக்ரசான் கலந்து விதைக்க வேண்டும். 3. நட்ட உடன் சுமார் 25 நாட்கள் கழித்து 15 நாட்களுக்கு ஒருமுறை 1% போர்டோ கலவையை நிலத்திலும், செடியிலும் அடிக்கவேண்டும்.

3. **வைரஸ் நோயால்** பாதிக்கப்பட்ட செடியின் இலேகள் உதிர்ந்து செடிகள் பட்டுவிடும். பாதிக்கப்பட்ட செடியை பிடுங்கி எரித்து விடவேண்டும்.

கே: ஐப்பசி மாத விவசாயச் செய்திக் கதிரில் டி.எல். 3025 அவரையைப்பற்றி தகவலென வெளியிட்டு இருந்தீர்கள். அந்த அவரை விற்பனைக்கு எங்கு கிடைக்கும்? அதன் விலை என்ன?

(செ. **ஆரோகியநாதன்**. பூமனூர்,
சேலம் மாவட்டம்).

ப: டி.எல். 3025 என்ற அவரை இப்போது விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் அளவுக்கு இன்னும் உற்பத்தி செய்யப்படவில்லை. இவ்வருடம் ஜூலை-ஆகஸ்ட் மாதத்தில் விநியோகத்திற்குக் கிடைக்கும்.

கத்தரிச் செடியில் காணும் நோய்கள்

சி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பி.எஸ்சி. (வேளாண்மை), கா. சிவப்பிரகாசம், பி.எஸ்சி. (வேளாண்மை),
எச். டி. லெவின், எம்.எஸ்சி. (வேளாண்மை),
பூசண இயற்பிரிவு, வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சிக் கழகம், கோவை–3.

மக்களின் நல்வாழ்விற்கு சத்துணவைத் தரும் காய்கறிகள் இன்றியமையாதவை. குறுகிய காலத்தில் நல்ல வருமானத்தைத் தரக்கூடிய காய்கறிகளில் கத்திரியும் முக்கியமானதாகும். தக்க தடுப்பு முறைகளை உரிய காலத்தில் கையாண்டு நோய்களின் அழிவினின்றும் காப்பாற்றினால், கத்திரியில் மிகுதியான விளைவினைப் பெறலாம்.

நாற்றழுகல், வாடல் போன்ற பூசண நோய்களாலும், இலை சிறுத்தல் என்னும் வைரசு நோயாலும் கத்திரிச் செடிகள் பாதிக்கப்படுகின்றன.

1. நாற்றழுகல் (Damping off)—

இந் நோயின் பொதுவான அறிகுறி நாற்றின் தண்டுப் பாகம் தரை மட்டத்தில் தாக்கப்பட்டு அழுகிய நிலையில் சாய்ந்து காணப்படும். தண்டுப் பாகமும் இலைகளும் அழுகிவிடுவதால் நாற்று இருந்த இடமே கண்ணுக்குத் தெரியாத வகையில் மறைந்து விடும். ஆரம்பத்தில் இந்நோய் நாற்றங்காலில் ஒரு சில பகுதிகளில் தென்பட்டு நாளடைவில் காலநிலை தோதாக இருந்தால் நாற்றங்கால் முழுவதற்கும் பரவுகிறது. இந் நோயினால், நாற்றங்காலில் விதைத்த விதைகளில் பெரும்பாலானவை முளைப்பதில்லையாதலால் சொட்டை சொட்டையாக நாற்று இல்லாது காணப்படும். குளிர் காலத்திலும் மழை காலத்திலும் இந் நோய் மிக வேகமாகப் பரவும். நெருக்கமாக உள்ள இடங்களில் வளரும் நாற்று இந் நோய்க்கு எளிதில் இலக்காகின்றன.

தடுப்பு முறை—

நல்ல வடிகாலினைக் கொண்ட நாற்றங்காலைத் தேர்ந்தெடுத்து மேடைப் பாத்திகளில் நாற்றுப் பாவுதல் வேண்டும்.

குறைந்த அளவு விதையினைப் பயன்படுத்தி நெருக்கமில்லாது நாற்றுப் பாவ வேண்டும்.

விதை பாவுவதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பு பாத்திகள் நன்றாக நனையுமாறு ஒரு சத விகித போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும்.

நாற்று அழுகலைத் தடுப்பதற்காக நாற்றுப் பாவிய இருபத்தி ஒன்றும் நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை பாத்திகள் நன்றாக நனையுமாறு ஒரு சத விகித போர்டோ கலவையால் தெளித்து வரவேண்டும்.

2. வாடல் (Wilt)—

செடியின் அடிப்பாகத்திலுள்ள இலைகள் முதலில் மஞ்சள் நிறம் பெற்று வாடிக் காணப்படுகின்றன. நாளடைவில் எல்லா பாகங்களுக்கும் பரவி இலைகள் முழுதும் காய்ந்து விடுகின்றன. இறுதியில் தண்டுப் பாகமும் பாதிக்கப்பட்டு வீணாகின்றது. இந்நோய்க்கு இலக்கான செடியின் தண்டின் அடிப்பாகத்தை வெட்டிப் பார்த்தாலும் பட்டையை நீக்கிப் பார்த்தாலும் நிறம் மாறிக் கறுத்துத் தென்படுவதைக் காணலாம்.

வாடல்நோய்
குறுக்குத்தோற்றம்

வாடல்நோய்

தடுப்பு முறை—

வாடிய செடிகளை உடனுக்குடன் பிடுங்கி அழித்துவிட வேண்டும்.

ஒரு சத விகித போர்டோ கலவை அல்லது 0·1 சத விகித நனையும் செரசான் (Wet Ceresan) இவற்றில் ஏதாவதொன்றால் செடிகளின் தூர்களை நனைத்து இந் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

3. இலை சிறுத்தல் (Little leaf)—

இது ஒரு வைரசு நோயாகும். இதனால் கத்திரி மிகுந்த சேதத்திற்குள்ளாகிறது. இந் நோயின் முக்கிய அறிகுறி இலை சிறுத்தலாகும். செடியின் எல்லாப் பருவத்திலும் இந் நோய் தோன்றலாம். புதிதாகத் தோன்றும் இலைகள் மேலும் மேலும் சிறுத்து சிறிய வடிவத்தை அடைகின்றன. அத்துடன் அவை மெல்லியதாகவும் பசுமை நிறம் வெளுத்தும் காணப்படுகின்

[30-ம் பக்கம் பார்க்கவும்

மேலும் அதிகம் என்பதே அவர் மேற்கொள்வாசகம்.

து. முத்துஸ்வாமி.

கும்பகோண விவசாயி சுந்தரராமன் ஒரு தடவை நெல்லில் பெரிய மகசூல் பெற்றுவிட்டதாலோ, அல்லது ஒரு முறை நல்ல மகசூல் தரும் விதைகளைப் பயன்படுத்தி விட்டதற்காகவோ திருப்தி அடைந்துவிடுவதில்லை. மேலும் கூடுதலான மகசூல் தரும் இன்னும் உயரிய நெல் விதைகள் கிடைக்குமா என்று தேடிக்கொண்டே இருப்பவர். அதேபோல் ஒரு ஆண்டில் கிடைத்துவிட்டாலும் திருப்தி அடைவதில்லை. கொஞ்ச அளவிலாவது கூடுதல் ஒவ்வொரு ஆண்டும் கண்டால்தான் அவருக்குத் திருப்தி. அவருடைய மேற்கோள் வாசகம் (motto) மனதில் ஒவ்வொரு விவசாயியும் இருத்திக்கொள்ள வேண்டியது— 'மேலும் அதிகம்' என்பதே அவருடைய மேற்கோள் வாசகம். அதனால்தான் கோ–25 நெல் வந்த புதிதில் அவர் அதைப் பயிரிட முன்வந்தவர்களுள் ஒருவர். அதேபோல் ஜப்பானிகா–இண்டிகா வகையான ஏ.டி.டீ. 27 முதலில் வந்ததும் சுந்தரராமன் அதைத் தன் வயலில் பரீட்சிக்கத் தவறவில்லை. அவர் தன் வயலில் ஏ.டி.டீ.27 ஐப் பயிரிட்டதற்குப் பெருமையும்

'அமோக விளைச்சல் தரும் ஆடுதுறை 27 நெல்'

சந்தோஷமும் அடைகிறார். சுற்றி கண்ணுக்கு எட்டிய மட்டும் ஏ.டி.டீ.–20-ம் இதர குறுவை வகைகளும் நிற்க அவை நடுவே இவருடைய ஏ.டி.டீ. 27 பயிர் அமோக விளைச்சலுக்கு அறிகுறியான செழுமையுடன் கனத்த பொற் கதிர்கள் காற்றில் அலைபாய கம்பீரமாகத் தலைசாயாமல் காட்சியளித்தது. இந்தப் பயிர் சுமார் 4,000 கிலோ ஹெக்டாருக்கு அளிக்கும் என்றார் அவர். குறுவைக்கு இது பெரிய மகசூல்தான்.

சுந்தரராமன் அவருடைய ஏ.டி.டீ. 27–ஐப் பயிரிட்ட விதம்:– நாற்றங்காலில் அவர் 300 ஆடு கிடை கட்டினார். எட்டு வண்டி கம்போஸ்ட் அடித்தார். ஹெக்டாருக்கு பதினைந்து கிலோ வீதம் விதையை மருந்து கலந்து விதைத்தார். விதைத்த பதினைந்தாம் தினம் எண்டிரின் மருந்தடித்தார்.

வயலை மூன்று தடவைகள் உழுது 38 வண்டிகள் கம்போஸ்ட் அடித்தார். நடவு சமயத்தில் 60 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும், 30 கிலோ அமோனியம் சல்பேட்டும் அடித்தார். 20 செண்டிமீட்டர் இடைவெளிவிடப்பட்ட வரிசைகளில் 10 செண்டி மீட்டர் இடைவெளி விட்டு நடவு செய்தார். பதினைந்து தினங்களுக்குப் பிறகு 60 கிலோ அமோனியம் சல்பேட் போட்டார். அறுவடைக்கு ஒருமாதம் முந்தி 30 கிலோ அமோனியம் சல்பேட் போட்டார்.

ஏ.டி.டீ. 27-ஐ அவர் நடவு செய்யக்காரணம் என்ன என்று கேட்டதற்கு "இத்தனை உரத்தை விழுங்கிவிட்டு உலக்கை போல் நிமிர்ந்து தலை சாயாமல் நிற்கும் பயிர் உண்ட வீட்டுக்கு இந்தப் பயிர் இரண்டு நினைக்கும்" என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டு, "இரண்டு என்றால் மற்றவகைகளைவிட இரண்டு மடங்கு மகசூல் தரும் என்ற பொருளில் கூறுகிறேன்" என்று சிலேடையாக கூறினார்.

இதர விவசாயிகள் இந்த வகையை ஏன் பயிரிடவில்லை என்று கேட்டதிற்கு "காலடியில் வந்த இலட்சுமியை கையால் தூக்காதவர்கள். அவர்களில் என் உறவினர்கள் ஒருவரை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் புதியதில் நம்பிக்கையில்லாதவர். வலுக்கட்டாயமாக நான் அவர் வயலில் ஏ.டி.டீ. 27 பயிர் செய்துள்ளேன். அவர் வயலில் 2,000 கிலோவுக்கு மேல் விளைந்ததில்லை. "இதற்கு கீழே விளைந்தால் நஷ்டத்துக்கு நான் ஈடுதருகிறேன் என்று உறுதி கூறி அவர் வயலில் ஏ.டி.டீ. 27 பயிரிட்டேன். அவர் வயல் அறுவடையாகிறது. 4,000 கிலோவுக்கு மேல் அவருக்கும் காணும்" என்றார். போட்டிக்காக உறவினர் வயலை எடுத்துக்கொண்டதால் போற்றத்தக்க வகையில் அதைப் பயிரிட்டிருந்தார் சுந்தரராமன்.



வானொலிச் செய்திகள்

அன்புடையீர்,

தாங்கள் கடந்த சில மாதங்களாக பத்திரிகைகள் வாயிலாகவும், ரேடியோ மூலமும் விவசாயிகளுக்காக விசேஷ ஒலிபாப்புத் சிட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்பதை படித்தும், கேட்டும் வந்திருக்கிறீர்கள். தறபோது நம்தமிழ்நாட்டிற்கு விவசாயிகளுக்காக தனிப்பட்ட ஒலி பரப்புத்திட்டம் ஜூன் 7-ம் தேதி துவக்கப்பட்டுள்ளது. இவ்வொலிப்பரப்புத் திட்டம் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து செயல் படுத்தப்படும். இத்திட்டம் 7—6—66 அன்று தஞ்சையில் நமது மாநில விவசாய அமைச்சர் திரு. கக்கன் அவர்கள், தஞ்சை மாவட்ட கலெக்டர் அவர்கள் தலைமையில் துவக்கிவைத்தார்கள். விவசாய இலாகா டைரெக்டர் அவர்கள் விசேஷ சொற்பொழிவாற்றினார்கள். இத்துவக்க விழா திருச்சி அகில இந்திய ரேடியோ நிர்வாகிகளால் நடத்தப்பட்டது. இத்துவக்க விழா நிகழ்ச்சிகளை அன்று மாலையே விவசாயிகளுக்கான நிகழ்ச்சிகளில் இரவு 7-30 முதல் 8-00 வரை ஒலிப்பரபபப்பட்டது. இதனை நீங்கள் கேட்டிருப்பீர்களென நம்புகிறேன்.

இவ்விசேஷ ஒலிபரப்புத திட்டம் மூலம் விவசாயிகளுக்குத் தேவைபபடும் விஞ்ஞான அறிவும், தீவிர சாகுபடித் திட்டம், தீவிர விவசாய பகுதிதிட்டம், உயர்ந்தவிளைச்சல் ரகததிட்டம் முதலியவைகளைப பற்றியும் அதிக அளவிலும், அடிக்கடியும் விவசாயிகளுக்காக ஒலிபரப்பப்படும். மேலும், ஆங்காஙகுள்ள விவசாயிகளின் அனுபவஙகளை அந்தந்த விவசாயிகள் நேரிடையே எடுத்துக் கூற பேட்டிகளும் ஒலி பரப்பப்படும்.

இவற்றையெல்லாம் ஒவ்வொரு நாளும் விவசாயகளுக்காக ஒலி பரபபவும், உங்களோடு நேரடித் தொடர்பு கொள்ளவும், திருச்சி அகில இந்திய ரேடியோ நிலையத்தில் ஒரு விவசாய அலுவலரும், அவருக்கு உதவியாக இரு அலுவலர்களும் பணி புரிவார்கள். ஆகவே, இப்புதிய ஒலிப்பாப்புத் திட்டத்தின்கீழ் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளை நீங்கள் கேட்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நலனைக் கருதும்,

து. கணபதி,
வானொலி விவசாய அலுவலர்,
36-B மௌண்ட் ரோடு,
சென்னை-2.

சென்ற மாதத்தில் நீங்கள் கேட்ட நிகழ்ச்சிகளில் நினைவில் கொள்ளவேண்டியவை !

உயர்ந்த ரக நாற்றங்கால் தயாரிக்கும் முறை

தீவிர உணவுப் பெருக்கத் திட்டத்தின் நவீன சாகுபடி முறைகளில் முதற்பகுதியே உயர்நத ரக நாற்றஙகால் தயாரிப்பது. இதனால் ஏக்கருககு 15—20 கிலோ விதை போதுமானது. 8—12 சென்ட நிலததில் இவ்விதைகளை நாற்றங்கால் விடுவதால் நாற்றுகள் படடை பிடித்து, நன்கு வளர்ந்து முடிவில் பலமுள்ள கதிர்கள் விட்டு அதிக மகசூல தருவதற்குத துணை புரிகின்றன. இம் முறையால், விதைக்காக பயன்படுத்தும் நெல் அளவு குறைவதால் தமிழ்நாட்டில் இரண்டு கோடி ரூபாய் பெறுமான நெல் விதைகள் வீணாக்கப்படாமல் மீதமாகிறது. பொறுக்கு நெல விதைகளை முளைகட்டுதலுக்கு முன்பு பூசண நாசினி மருந்து கலந்து குறிப்பிட்ட நேரத்தில் தண்ணீரில் ஊறவைதது பின்பு சாககுகளால் மூடி வைதது நாற்று விடவேண்டும் நாற்றங்கால் நிலத்தை போதுமான உரமிட்டு, பண்படுத்தி இருக்க வேண்டும். விதைத்த மறுநாள் தண்ணீரை வடியச் செய்ய வேண்டும். நெல் முளைப்புகள் இரண்டு அங்குலம் உயரம் வரும் வரை தினமும் புதுநீரை பாய்சச வேண்டும். நெல்லின வயதில் நாலில் ஒரு பங்கு நாற்றங்காலில் நாறறுகள் இருககவேண்டும். பூச்சி, பூசண தடுப்பு முறைகளை பயன்படுத்தி முன்பாதுகாப்பு செயதல்வேண்டும். நாற்றுகளைப் பிடுங்கும்போது வேர்கள் சேதமுறாமல் பார்ததுக்கொள்ளவேண்டும்.

(6—5—1966 அன்று திரு. எஸ். விநயகம், விதைப்பெருக்கு அலுவலர், மதுரை அவர்தம் வானொலி உரைச சுருக்கம்.)

விதைப் பரிசோதனையும் அதன் முக்கியத்துவமும்

விதைகளின் தரத்தை அறிய விதைப் பரிசோதனை செய்யவேண்டும். விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் இயங்கிவரும் விதைப் பரிசோதனை நிலையத்தில் விதைகள் இலவசமாகவே பரிசோதனை செய்யப்படுகின்றன.

விதைப் பரிசோதனையின்போது விதையின் தூய்மை, முளைக்கும் திறன், ஈரம், கடினத் தன்மை, பூச்சி பூசண தாககுதல்கள் முதலியவை சோதிக்கப்படுகின்றன. சோதனைக்கான விதை மாதிரி எடுக்கும்போது அதிக கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு ரகததிற்கும் ஒரு மாதிரி எடுத்தனுப்பவேண்டும். ஒரே பயிரில்

JL J-21m, N66 N66.23 69677

சாகுபடி செய்யும் முறைக்கேற்ப தனித்தனி மாதிரிகள் எடுத்தனுப்ப வேண்டும். அதாவது ஐந்து மூட்டை வரை ஒரு மாதிரி விதமும், ஆறு முதல் முப்பது மூட்டை வரை மூன்று மூட்டைககு ஒன்று வீதம் குறைந்தது ஐந்து மூட்டைகளிலிருந்தும், 30 மூட்டைக்கு மேற்பட்டால் ஐந்து மூட்டைக்கு ஒன்று வீதம் குறைந்தது 10 மூட்டைகளிலிருந்து மாதிரிகள் எடுத்தனுப்பவேண்டும்.

1. நெல், கோதுமை, மக்காச்சோளம், பீன்ஸ், பருத்தி, நிலக்கடலை போன்ற விதைகளுக்கு 1,000 கிராம் விதை அனுப்ப வேண்டும்.

2. சோளம், கம்பு, முள்ளங்கிக்கு 500 கிராம் விதை தேவைப்படும்.

3. வெங்காயம், பெர்சீம் போன்ற சிறு விதைகளாக இருந்தால் 100 கிராம் அனுப்ப வேண்டும்.

4. முட்டைக்கோஸ், காலிபிளவர் போன்றவற்றின் விதைகளுககு 250 கிராம் விதை அனுப்ப வேண்டும்.

விதை மாதிரியுடன் பின்வரும் விவரங்கள் அடங்கிய தாளும் அனுப்ப வேண்டும.

(1) விதை மாதிரி எடுத்த தேதியும் மாதிரி எடுத்தவர் பெயரும்.

(2) அனுப்புபவர் பெயர்.

(3) அனுப்புபவர் விலாசம்.

(4) அனுப்பப்படும் விதை எந்த வகையைச் சேர்ந்தது.

(5) விதை பற்றிய குறிப்பு(அதாவது மூலவித்தா, கிராம சகாயக் வித்தா).

(6) மாதிரி எடுக்கப்பட்ட கூறின் எண் அல்லது விவரம்.

(7) ஒவ்வொரு கூறிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரியின் அளவுகள்.

இவ்வாறு தகவலையும், விதையையும் "தாவர இயல் நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம், கோவை-3" என்ற விலாசத்திற்கு அனுப்புங்கள். விதையின் தரத்தை 20 நாட்களில் அறியக்கூடும். விதையினுள்ள ஈரத்தின் அளவை அறிய விரும்பினல் மேற்கொண்டு தனியாக 100 கிராம் விதை அனுப்ப வேண்டும்.

(10—5—1966 அன்று ஒலிபரப்பப்பட்ட திருமதி சுனந்தா சுகாராம ராவ், விதைப் பரிசோதனை அலுவலர், கோவை அவர்தம் உரையின் சுருக்கம்.)

குறுவைப் பட்டத்தில் இரண்டு லட்சம் ஏக்கராவில்

ஆடுதுறை 27 நெல் சாகுபடி.

உயர் விளைச்சல் ரக திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு குறுவைப் பருவத்தில் இரண்டு லட்சம் ஏக்கராவில் ஆடுதுறை 27 நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பங்கு கொள்ளும் விவசாயிகள் அனைவரும் தீவிர சாகுபடி முறைகளைக் கடைப்பிடிக்க வழிவகை செய்யப்படும். சாதாரண குறுவை நெல்லில் கிடைக்கும் மகசூலைவிட இரண்டு மடங்கு அதிக மகசூல் விளைவிக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

உற்பத்தித் தேவைகளுக்கு பண்ணைத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. ஏக்கருக்கு ரூ. 200 வரையில் கடன் வசதி அளிக்கப்படுகிறது. இதில் சாகுபடி செலவுக்காக ரூ. 100-ம், விதை, உரம், மருந்து போன்ற உற்பத்திப் பொருளுக்காக ரூ. 100-ம் கொடுக்கப்படுகிறது. காவேரி பாசனப் பகுதிகளில் 1966 குறுவைப் பட்டத்தில் இரண்டு லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்வதற்கான விதை விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதிக அளவில் மண் மாதிரிகளை எடுத்தனுப்பி சோதனைகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உயர் விளைச்சல் ரக திட்டத்தின்கீழ் ஏக்கருக்கு தழைச்சத்து, மணிச்சத்து. சாம்பல் சத்து முறையே 27 கிலோ. 21 கிலோ, 13½ கிலோ கொடுக்கும் வகையில் உரமிடப்படும். சூப்பர் பாஸ்பேட், அம்மோனியம் சல்பேட், மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் போன்ற இரசாயன உரங்களுக்குப் பதில் கலப்பு உரங்களும் உபயோகிக்கலாம். உற்பத்திக்குத் தேவையான விதை, உரம், பூச்சி, பூசண மருந்து முதலியவைகளை சாகுபடிக்கு முன்னதாகவே கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயிர் பாதுகாப்பு செய்ய, வேண்டிய கருவிகள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தில் பங்கு கொண்டு உற்பத்தியைப் பெருக்கவேண்டும்.

(13—5—1966 அன்று திரு எம். காசி விஸ்வநாதன், வேளாண் வல்லுனர் (தீவிர சாகுபடித் திட்டம், தஞ்சாவூர்), அவர்தம் வானொலி உரையின் சுருக்கம்.)

நவீன விவசாயக் கருவிகளின் உபயோகங்களும் நன்மைகளும்

பண்டைய காலங்களில், மக்கள் பெருக்கம் குறைவு. பயிரிடப்படும் பரப்பு மிகக் குறைவு. பயன்படுத்தப்படும் உழவுக் கருவிகள் சிறந்த கருவிகள் அல்ல. தற்போது உழவுக் கருவிகள், மிகச் சிறந்த முறையில் நிலத்தைப் பண்படுத்தவும், குறுகிய காலத்தில் செய்து முடிக்கும் கருவிகள் பயன்படுத்துவதால், விவசாயி இன்னும் அதிக அளவில் பயிர் செய்ய முடிகிறது. ஆகவே, உழுவதற்கு இரும்பு கலப்பைகளும், பரம்பு செட் டூண்களும் விதைப்பதற்கு இயந்திர விதைக் கலப்பைகளும் மண்ணைக் கிளறுவதற்கு, அறுவடை செய்வதற்கு குண்டகாக்களும், வரிசை நடவு பயிர்களில் களை எடுப்பதற்கு களை எடுக்கும் கருவிகளும், வரிசை நடவுப் பயிர்களில் உரமிடுவதற்கு ஏதுவான கருவிகளும், பூச்சி மருந்து பயன்படுத்துதல், மருந்து தெளிப்பான், பூச்சி மருந்து தூவு கருவிகளும், அதிக பரப்பு உள்ள நிலங்களில் உழுவதற்கு எல்லா சாதனங்களும் இணைக்கப்பட்ட, டிராக்டர் பயன்படுத்துவதால்—1. காலமும், பணமும் மிச்சமாகிறது. 2. குறிப்பிட்ட வேலைகளை செய்யலாம். ஆகவே விவசாயிகள் நவீன விவசாயச் சம்பந்தமான கருவிகளை பயன்படுததுவதால் காலம் மிச்சமாவதுடன் அதிக லாபமும் கிடைக்கிறது.

(17—5—1966 அன்று பி. கே. ராதாகாந்த், விவசாய பொறியாளர், சென்னை, அவர்களின் வானொலி உரைச் சுருக்கம்.)

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

விவசாயிகள் தங்கள் மகசூலை நல்ல விலைக்கு விற்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் மார்க்கெட் கமிட்டி ஏற்படுத்தி ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை நிறுவி வருகிறார்கள். 1959-ம் ஆண்டில் புதுப்பிக்கப் பட்ட விளைபொருள்கள் மார்க்கெட் சட்டப்படி எந்த விளைபொருளையும் அச்சட்டத்திற்கு உட்படுத்தலாம். அதன்படி மார்க்கெட் கமிட்டி ஒன்று நிறுவப்பட்டு, விவசாயிகள், வியாபாரிகள் சார்பில் நபர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டு அங்கம் வகிக்கிறார்கள். சரியான எடை போடுதல் விதிகள் மூலம் கமிஷன், தரகு, எடைக்கூலி முதலியவை நிர்ணயிக்கப்பட்டு கமிட்டியின் மேற்பார்வை அதிகாரியால் கவனிக்கப்படுகிறது. முக்கியமான விளை பொருள்களை சேகரிக்கும் இடங்களில் கிடங்கு வசதிகள், வியாபாரம் செய்வதற்கான கொட்டகைகள், பொருள்களை காயவைக்கவும், சுத்தம் செய்யவும் தேவைப்படும் களங்கள், விவசாயிகள் தங்க இட வசதி முதலிய வற்றுடன் கூடிய ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் நிறுவப்படுகின்றன. நம் மாநிலத்தில் வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி கோயம் புத்தூர், திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மார்க்கெட் கமிட்டி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம் மாவட்டங்களில் நெல், மணிலா, பருத்தி, புகையிலை, கரும்பு வெல்லம், தேங்காய், மஞ்சள், முந்திரி, மிளகாய், எள் முதலியன கட்டுப்படுத்தப்பட்ட விவசாய விளைபொருள்களாகும். தற்போது 82 ஒழுங்கு முறை விற் பனைக் கூடங்கள் ஏழு மாவட்டங்களில் செயல்படுகின்றன. இந்தக் கூடங்களில் சரக்கு சுத்தம் செய்யப்பட்டு, கமிட்டியின் அளவு சரக்குகளில் நிரப்பப்பட்டு லைசென்ஸ் பெற்றவர் களால் எடை போடப்படுகின்றது. வியாபாரிகள் சரக்குக் கான தங்கள் விலை மதிப்பை ரகசியமாக ஏலச்சீட்டுகளில் குறித்து அதற்கான பெட்டியில் போடவேண்டும். அறிவித்த நேரத்தில் இச் சீட்டுகள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு லாட்டிற்கும் கிடைத்த அதிக விலை அறிவிக்கப் படுகிறது. போட்டியினால் விவசாயிக்கு அதிக லாபம் கிடைக்கிறது. பணம் அன்றே பட்டுவாடா செய்யப்படுகிறது, விவசாயிக்கு கமிஷன், தரகு, தர்மம், தள்ளுபடி, எடைக்காக கழிவு போன்ற தொல்லைகள் இடையாது. வியாபாரிக்கும் தரமான பொருள் கிடைக்கிறது. எனவே, விவசாயிகளும் வியாபாரிகளும் இந்த ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்களை நல்ல முறையில் பயன்படுத்தி நலம் பெற வேண்டும்.

(20—5—1956 அன்று திரு. வி. கே. ஸ்ரீராமன், மாநில வர்த்தக அலுவலர், சென்னை, அவர்களுடைய வானொலி உரையின் சுருக்கம்.)

கொடைக்கானலில் உருளைக்கிழங்கு சாகுபடி அபிவிருத்தி

உருளைக்கிழங்கு, நம் நாட்டின் குளிர் பிரதேசமான உதகமண்டலத்திலும் கொடைக்கானல் பகுதிகளிலும் பயிரிடப்பட்டு வருகிறது. உருளைக்கிழங்கு தீவிர சாகுபடி திட்டம் கொடைக்கானலில் அமல் நடத்தப்பட்டு வருகிறது. சித்திரை—வைகாசி பருவம், புரட்டாசி—ஐப்பசி பருவம் ஆகிய பருவங்களில் இப்பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பயிர் 3½ மாதத்திலும், 4½ மாதத் திலும் பலன் தரக்கூடிய இரு வகைகளாகப் பிரிக்கலாம். மேலும் சமசீதோஷ்ண நிலையிலும் உருளைக்கிழங்கில் சில வகைகள் பயிரிடப்பட்டு நல்ல பலனும் அளித்து வருகிறது. ஒரு ஹெக்டருக்கு 1,750 கிலோ கிராம் விதைக் கிழங்கு தேவைப்படுகிறது. இது கிராம சகாயக் திட்டத்தின்மூலம் செயலாக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக விதைகளைக் குறிப் பிட்ட காலத்தில், நல்ல நிலையில் குறித்த ஆழத்தில் விதைக்க வேண்டும். இது முளைகள் சீக்கிரமாக முளைக்க உதவுகிறது. வரிசைக்கு வரிசை சுமார் இரண்டு அடியும், வரிசையில் ஆறு அங்குல இடைவெளியும் இருக்க வேண் டும். பயிர் செய்யப்போகும் நிலங்களுக்குப் போதிய, தொழு உரம், பசுந்தாள் உரம், ரசாயன உரம் போடவேண்டும் கிழங்கு சாகுபடிக்குப் பின்னர், பசுந்தாள் பயிர் செய்யவேண்டும். இப்பயிருக்கு இரண்டு முறை களை எடுத் தலும் இரண்டு மாதத்திற்குப் பின்னர் மண் அணைப்பதும் முக்கியமாக செய்யவேண்டியவை.

பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் குறிப்பிட்ட நேரத்தில் மேற்கொள்ளவேண்டும். இத் தீவிர திட்டத்தால், உருளைக் கிழங்கு சாகுபடி செய்ய நல்ல வாய்ப்புகள் இருப்பதால் இதனை இன்னும் அதிக அளவிற்கு உற்பத்தி செய்ய விவசாயிகளுக்குக் கூட்டுறவு சங்கங்களின்மூலம், விதைக் கிழங்கு, உரம், பூச்சி, பூச்ண மருந்துகள் வாங்குவ தற்கும் சாகுபடி செய்வதற்கும் குறுகிய கால கடனுதவி வழங்கப்படுகிறது.

(27—5—1966 அன்று திரு எம். என். மீனாட்சி சுந்தரம், பிரத்தியேக மாவட்ட விவசாய அலுவலர் (உருளைக்கிழங்கு அபிவிருத்தி) கொடைக் கானல் அவர்தம் வானொலி உரைச் சுருக்கம்,)

மாநில நிலக்கடலை விளைச்சல் போட்டி.

1963—64-ம் ஆண்டுக்கான மாநில நிலக்கடலைப் போட்டியில் அதிகமான விளைச்சலை கண்டுள்ளவர் வட ஆற்காடு மாவட்டம், வேலூர் தாலுகா, குப்பம் கிரா மத்தைச் சார்ந்த திரு. கே. ஜி. கிருஷ்ணன் ஆவார். இவர் ஏக்கருக்கு 1,500 கிலோ (காய்ந்த பின் எடை) எடுத்துள்ளார். 1963-64 ஆண்டுக்கு பரிசுக்குறியவ ராகிறார்.

காலநிலையும் பருத்தி சாகுபடியும்

[சி. பாலசுப்பிரமணியன், விவசாய வானநிலை ஆராய்ச்சியாளர், விவசாயக் கல்லூரி, கோவை-3.]

வருடத்திற்கு வருடம் பருத்தியின் மகசூலில் காணப்படும் மாறுதல்கள் இடத்திற்கிடம் காணப்படும் மாறுதல்களைவிட அதிகமாக இருக்கின்றன. இதிலிருந்து பருத்தி சாகுபடிக்கும் கால நிலைக்கும் உள்ள தொடர்பு நன்கு விளங்கும். காலநிலையில் புழுக்கமான சூழ்நிலையும் குளிருடன் கூடிய காற்றின் ஈரத்தன்மையும் அதிகமாயிருந்தால் பருத்தியின் மகசூல் பாதிக்கப்படும்.

பருத்தியில் காய்கள் உண்டாகும் தன்மையானது காற்றின் வெப்ப நிலையைத் தழுவியே இருக்கிறது. காற்றின் வெப்பநிலை மண்ணின் வெப்பநிலையைப் பாதிக்கிறது. மண்ணின் வெப்பநிலையை ஒட்டித்தான் பருத்தி விதையின் முளைப்பும், சிறு செடிகளின் வளர்ச்சியும் இருக்கின்றன.

சூரிய வெளிச்சம் அதிகமாகவும் காற்றில் கரிமிலவாயு அதிகமாகவும் இருந்தால் செடியின் வளர்ச்சி ஓரளவிற்குப் பாதிக்கப்படுகின்றது. ஆனால் பருத்தியின் இளஞ்செடிகளுக்கு சூரிய வெளிச்சம் மிக அவசியம்.

மழையும் பருத்தியும்.—பருத்தியின் பல ரகங்களுக்கு பல மாதிரியான மழை தேவைப்படுகிறது. ஜனவரி முதல் மார்ச் வரையில் பெய்யும் மொத்த மழையை ஒட்டித்தான், பருத்தி மகசூலுக்கு மேல் தூவலாகத் தரப்படும் 100 ராத்தல் அமோனியம் சல்பேட்டினால் பயிருக்கு உண்டாகும் நன்மை அமைகிறது.

பருத்தி விதைக்குமுன் 6 வாரங்களில், நாலு அல்லது இரண்டு வாரங்களில் பெய்யும் மழையைத் தழுவித்தான் பருத்தியின் விளைச்சலும் வளர்ச்சியும் இருக்கின்றன. கோவில்பட்டியில் ஜுலை, ஆகஸ்டு மாதங்களில் பெய்யும் ஒவ்வொரு அங்குல அதிக மழையும், கம்பிற்குப் பின் சாகுபடியானால் பருத்தியின் மகசூலை 30 முதல் 40 சதவிகிதம் குறைக்கின்றது. ஆனால் அதே கோவில்பட்டியில் சோளத்திற்கு பின் சாகுபடியாகும் பருத்தியின் மகசூல் மேற்கூறியவாறு பாதிக்கப்படுவதில்லை.

பருத்தி விதை முளைத்ததற்குப்பின் பருத்திச் செடிக்கு மழையும் வெப்பமும் கலந்திருக்க வேண்டும். பருத்திச் செடிக்குக் கீழ்க்கண்ட தருணத்தில் சராசரியிலிருந்து பெருத்த மழைவரை தேவைப்படுகின்றது :—

(i) விதைப்பிற்குப் பின் ஆறு முதல் எட்டு வாரங்களிலும், பூக்கும் சமயத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பும் மற்றும் நவம்பர் மாதத்திலும்

(ii) பூக்கும் கிளைகள் தோன்றும் ஒரு வாரம் முன்பும் தோன்றும் வாரத்திலும்;

(iii) பிப்ரவரி, மார்ச் மாதங்களிலும்;

(iv) ஜுன், ஜுலை, ஆகஸ்டு மாதங்களில் குறைந்தது ஆறு அங்குல மழை பெய்ய வேண்டும்;

(v) வளர்ச்சிக் காலம் முழுவதும்.

விதைப்பை ஒட்டியும், காய்கள் உண்டாகும் தருணத்திலும் கனத்த மழை இருந்தால் பயிர்கள் வெகுவாக பாதிக்கப்படும். காய் முற்றும் தருணத்தில் பெய்யும் மழை பருத்தியின் குணத்தைப் பாதிக்கின்றது. ஜுன் முதல் டிசம்பர் மாதம் வரையில் பெய்யும் மழை அதிகமானால் பருத்தியின் மகசூல் பாதிக்கப்படும். பூக்கும் தருணத்தில் லேசாக மழை தூறிக்கொண்டிருந்தால் பூக்கள் நன்றாக மலரும்.

காலநிலையும் பருத்தியில் காணப்படும் பூச்சிகளும் பூஞ்சண நோய்களும்.

(i) **பூச்சிகள்.**—கோயம்புத்தூரில் நீர்ப்பாசனத்தில் சாகுபடியாகும் MCU 1. காய்ப்புழு காணப்படும் மூன்று வாரங்களுக்கு முன்பு (அதாவது விதைத்த பத்து வாரங்களுக்குப் பின்பு) வெப்பம் அதிகமாக இருந்தால், இந்தப் பூச்சி பருத்தியை அதிகமாகத் தாக்கும். இந்த அதிக வெப்பநிலை மூன்று வாரங்களுக்கு நீடித்து இருந்தால் பூச்சி மிக அதிகமாகப் பருத்தியைத் தாக்கும். ஆனால் பருத்தியில் உள்ள காற்றில் காலையில் ஈரச்சத்து அதிகமாக இருந்தால் இந்த பூச்சிக்கு இந்தக் காலநிலை ஏற்றதில்லை. காய்ப்புழு காணப்படும் வாரத்தில் அதிக மழை இருந்தால் பூச்சியின் தாக்குதல் குறையும்.

நவம்பர் மாத மத்தியில் காற்றின் வெப்பநிலை 72·3° F-ம் ஈரச்சத்து 68 சதவிகிதமும் இருந்தால் பருத்தியைத் தாக்கி இலையைத் தின்னும் பூச்சிகள் அதிகமாக காணப் படும். அக்டோபர் மாதத்தில் பேன் ஏராளமாக செடியில் காணப்படும். காலம் தவறி விதைத்த பருத்திப் பயிரை இலை தின்னும் பூச்சிகளும், பச்சை தத்துப் பூச்சிகளும் அதிகமாகத் தாக்கும்.

(ii) **பூஞ்சண நோய்கள்** .—மண்ணின் வெப்பநிலை 68°F-க்குக் குறைச்சலாக இருந்தால் இளஞ்செடிகளைத் தாக்கும் பூஞ்சண நோய் அதிகமாக இருக்கும். கோயம்புத்தூரில் MCU 1 பருத்திப் பயிரிலுள்ள காற்றின் ஈரச்சத்து அதிகமாக இருந்தால் இலைப்புள்ளி நோய் அதிகமாக இருக்கும்.

பருத்திச் செடிகளுக்குள் இருக்கும் காற்றின் ஈரச்சத்து அதிகமாக இருந்தால் கரும்புள்ளிநோய் அல்லது கோண இலைப்புள்ளி நோய் அதிகமாக செடிகளைத் தாக்கும். பருத்தியின் ரகத்தைப் பொறுத்து இந்நோயின் கடுமை அக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரையில் பெய்யும் மழையின் அளவைப் பொருத்தும் இந்நோயின் கடுமை இருக்கும். வேகமாக அடிக்கும் காற்றை ஒட்டியும் மழையைத் தழுவியும் இந்நோய் மீண்டும் பருத்தியில் இரண்டாந்தடவை காணப்படும். பருத்தி விதைக்கும் சமயத்தை ஒட்டியே இந்நோயின் தாக்குதல் இருக்கும். பொதுவாக காலங்கடந்து விதைக்கப் படும் பகுதியில் இந்நோய் அதிகமாகக் காணப்படும்.

காலநிலையில் காணப்படும் வெப்பநிலை, காற்றின் ஈரச்சத்து, காற்றின் வேகம், சூரிய வெளிச்சத்தின் தன்மை இவைகளை ஒட்டியே பருத்திச் செடியின் வளர்ச்சியும் மகசூலும் இருக்கின்றன. காலநிலையின் வெவ்வேறு அம்சங்களுக்கும் சாகுபடியாகும் பருத்திக்கும் அதைத் தாக்கும் பூச்சிகளுக்கும், பூஞ்சண நோய்களுக்கும் உள்ள தொடர்பை நன்குணர்ந்து அதற்கேற்றாற்போல் பருத்தி சாகுபடி செய்தால் பருத்தியில் அதிக மகசூல் நிச்சயமாக எடுக்கலாம்.

போன் :
24558, 34251 & 63746

தந்தி :
'VENPALCO'

கஜலக்ஷ்மி கலப்பு உரங்கள்

GOVERNMENT ORDER NO. 3353

மிகச் சிறந்த N. P. K. 'கஜலக்ஷ்மி மார்க்' கலப்பு உரங்களை எல்லாவிதமான பயிர்கள், காய்கறி வகைகள், புஷ்பச் செடிகள், தோட்டப்பயிர்கள் முதலியவைகளுக்கு உபயோகித்து அதிக லாபம் அடையுங்கள்.

5 கிலோ, 2 கிலோ பாக்கெட்டுகளிலும் கிடைக்கும்.

மிகவும் உபயோககரமான சகலவித நவீன விவசாயக் கருவிகளும் கிடைக்கும்.

V. வேணுகோபால் பிள்ளை & Co. & இராமன்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்

2/27, பிராட்வே :: சென்னை-1.

கிளைகள் :

திருவள்ளூர், பொன்னேரி, காரனோடை & விழுப்புரம்

ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.

1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திய கால நிலை அறிக்கை

(சி. பாலசுப்ரமணியன், ரா. ஜானகிராமன், விவசாய காலநிலை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை.)

இம்மாத முதல் தேதியன்றும் ஒன்பதாம் தேதியன்றும் சென்னை மாநிலத்தின் தென் பகுதிகளில் மட்டும் அங்கும் இங்கும் சிறு தூரல் இருந்தது. 15-ம் தேதி முதல் ஐந்து நாட்களில் பரவலான தூரலும் வெய்யிலும் தென் பகுதிகளில் மாறி மாறி அமைந்தன. 20-ம் தேதி யன்று மாநிலம் முழுதும் ஆங்காங்கு சிறு மழை யிருந்தது. இதற்குப் பிறகு 27-ம் தேதி நீங்கலாக மற்றைய நாட்களில் மாத இறுதி வரை தூரல் ஆங் காங்கு இருந்துகொண்டே இருந்தது. மேற்குறித்த நாட்கள் தவிர மற்ற நாட்களில் பொதுவாக வரட்சி நிலவி யது.

மாத முழுவதும் பகல் உஷ்ணத்தில் எல்லா மாவட்டங் களிலுமே ஊசல் காணப்பட்டது.

கால நிலையும் பயிர் வளர்ச்சியும்

செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சீபுரம் பகுதிகளில் சிறு தூரல் இருந்தது. கோ-18 நெல் அறுவடை ஆரம்பமாயிற்று. நெல்லில் சிறிது நவாப்பூச்சியும் துளைப்பான்களும், இலைப்புள்ளி நோயும் தோன்றின. அதே போல வேர்க்கடலையில் சுருள் பூச்சியும், கத்தரியில் புள்ளி வண்டுகளும் சிறிதளவு தோன்றின இவை தகுந்த முறைகளால் தடுக்கப்பட்டன.

வட ஆற்காடு மாவட்டத்திலும் சிறிது தூரல் இருந்தது. கரும்பு வளர்ச்சி திருப்திகரமாக இருந்தது. சிறிதளவு குறுத்துப் பூச்சிகள் காணப்பட்டு தகுந்த முறையால் தவிர்க்கப்பட்டன. தென்னாற்காடு மாவட்டத்தில், பாலூர்ப் பகுதிகளில் மாத்திரம் கொஞ்சம் மழைப்பாங்கல் இருந்தது. பொதுவாக வரட்சி காரணமாக தோட்ட வேர்க்கடலையில் சுருள் பூச்சியும், கோடை வேர்க்கடலையில் பெருமளவு இலைப்புள்ளி நோயும் காணப்பட்டன. அதே போல் கோடை எள்ளில் கொக்கிப் புழுக்களும், தோட்ட எள்ளில் இலைப்புள்ளி நோயும் கண்டு தடுப்பு முறைகள் கையாளப்பட்டன. தஞ்சை மாவட்டத்தில் சுமாரான மழை யிருந்தது. அதனால் கடலையும் பருத்தியும் பயனடைந் தன. வெகுவாக மாத முழுதும் நிலவிய வரட்சி நெல் அறுவடைக்கும், பூமிகளை உழுது வைப்பதற்கும் பயன் பட்டது. பட்டுக்கோட்டைப் பகுதிகளில் வேர்க்கடலையில் புழுக்கள் ஏற்பட்டு தகுந்த முறையால் தவிர்க்கப்பட்டன.

திருச்சி மாவட்டத்தில் மாத இறுதியில் கொஞ்சம் மழையிருந்தது. அறுவடைக்குத் தயாராக இருக்கும் புஞ்சை தானியங்களுக்கு இது உபயோகப்படாவிட்டாலும் வேர்க்கடலை முதலிய பயிர்களுக்கு பூமியைத் தயார் செய்ய இது மிகவும் உதவியது.

மதுரை மாவட்டத்திலும் மழையிருந்தது. பருத்தி, வேர்கடலை முதலிய பயிர்களுக்கு இது நன்மை செய்தது. பின் பருவப்பயிர்களுக்கு பூமியைத் தயார் செய்ய இது சாலவும் உதவிற்று.

இராமநாதபுரம் மாவட்டத்தில், சாத்தூர் பகுதிகளில் கொஞ்சம் நல்ல மழையிருந்தது. அதனால் பருத்தி, வேர்க்கடலை, சோளம் முதலியவற்றில் களை எடுக்கப்பட்டது. நெற்பயிருக்கும் இது பலனளித்தது. இராமநாதபுரத்தை யடுத்த ஒரு சில பகுதிகளில் மாத்திரம் சிறு தூரல் இருந் தது. அந்த இடங்களில் பூமியை உழுதல், வரப்புக் கட்டுதல் போன்ற வேலைகள் செய்யப்பட்டன.

நெல்லை மாவட்டத்தில் பெய்த மழை பருத்திக்கு மிகவும் நன்மை செய்தது. ஏரிகளுக்குக்கீழ் குறுகிய கால நெல் விளைவிக்க இது தூண்டுதலாக இருந்தது.

சேலம் மாவட்டத்தில் அங்குமிங்கும் தூரல் மழை இருந்தது. இது பூமியை உழுது வேர்க்கடலை கம்பளிப் பூச்சியின் கூடுகளை அழிக்க உதவுயது. கம்பு நாற்று நடுவதற்கும், கார் நெல் நாற்று விடுவதற்கும் இது உதவியது. குறிப்பிடத்தகுந்த அளவில் பூச்சிகளோ வியாதிகளோ காணப்படவில்லை.

கோவை மாவட்டத்தில் கொஞ்சம் மழை பெய்தது. இது போதிய அளவு இல்லாததால் சோளம், ராகி, நெல், கரும்பு முதலிய பயிர்கள் விசேஷ நன்மை எதும் பெற வில்லை. கருங்கண்ணிப் பருத்திமார்களைப் பிடுங்க இது உதவியது. நெல்லில் நவாப்பூச்சி, திரிப்ஸ், முதலிய வையும், ராகியில் வேர் அசுக்களும், வெண்டையில் நவாப் பூச்சி, துளைப்பான் முதலியவையும் ஏற்பட்டன. தகுந்த தடுப்பு முறைகளால் தவிர்க்கப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில் உதகைப் பிராந்தியத்திலும் நஞ்ச நாடு பிராந்தியத்திலும் நல்ல மழையிருந்தது. அதனுல் கோடை உருளைக்கிழங்கும் இதர பழ மரங்களும் நல்ல பலனடைந்தன. இரண்டாம் போக உருளைக்கிழங்கு மாத்திரம் அதிக ஈரத்தால் கொஞ்சம் பாதிக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்திலும் மழை இருந்தது. இதனுல் பழ மரங்கள், உளுந்து, பசுந்தாளுரப் பயிர்கள் முதலியன நல்ல பலனையடைந்தன. பூச்சிகள், வியாதிகள் எதுவும் தென்படவில்லை.

குறிப்பிடத்தக்க மழையளவுகள் (மில்லி மீட்டர்களில்)

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	மழையளவு.
(1)	(2)	(3)	(4)
1	1-4-66	பாம்பன்	85·0
2	22-4-66	சேலம்	73·0
3	30-4-66	உதகமண்டலம்	43·2

பிராந்திய மழையளவுகள் (மில்லி மீட்டர்களில்)

வரிசை எண்.	பிராந்தியத்தின் பெயர்,	ஏப்ரல் மாத மழை யளவு.	சராசரியிவ் இருந்து மாறுபாடு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)
1	வட பிராந்தியம்	0·6	—15·2	மிகக் குறைவு
2	கீழ்க்கரை பிராந்தியம்	11·7	—13·2	குறைவு
3	மத்தியப் பிராந்தியம்	50·1	—3·4	சற்றே குறைவு
4	தென் பிராந்தியம்	53·1	—7·0	ஷை
5	மலைப் பிராந்தியம்	104·3	+0·8	சற்றே அதிகம்

1966-ம் ஆண்டு ஏப்ரல் மாத மழையளவு (மில்லி மீட்டர்களில்)

பிராந்தியத்தின் பெயர்.	இம்மாத மழை யளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழை யளவு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்			
சென்னை (மீனம்பாக்கம்) ..	..	—15·5	24·0
திரூர்குப்பம் *	..	—1·3	10·2
வேலூர்	..	—25·4	3·0
குடியாத்தம் *	2·5	—18 5	2·5
கீழ்க்கரைப் பிராந்தியம்			
பாலூர் *	14·0	—7·1	62·6
திண்டிவனம் *	..	—19·3	12·7
கடலூர்	..	—24·9	61·0
நாகப்பட்டினம்	..	—28·2	47·0
ஆடுதுறை *	21·1	+1·3	41·7
பட்டுக்கோட்டை *	35·0	—0.8	125·5
மத்தியப் பிராந்தியம்			
சேலம்	78·0	+29·0	78·0
சேலம் *	73·5	+35·7	73·5
கோயமுத்தூர் *	59·2	+19·5	82·8
கோயமுத்தூர்	44·0	+3·9	78·0
ஆலியார் நகர் *	12·9	—79·3	12·9
திருச்சிராப்பள்ளி	33·0	—29·0	45·0
தென் பிராந்தியம்			
மதுரை	33·0	—21·9	64·0
பாம்பன்	136·0	+89·3	197·0
கோவில்பட்டி *	32·8	—52·0	88·7
பாளையங்கோட்டை	62·0	—1·0	106·0
அம்பாசமுத்திரம் *	25·1	—66·3	90.9
நாகர்கோயில் *	33·0	—30·0	35·5
கன்னியாகுமரி *	49·6	+33·1	56·0
மலைப் பிராந்தியம்			
கோடைக்கானல்	60·0	—62·4	154·0
கூனூர் *	112·0	—27·4	461·5
உதகமண்டலம் *	138·7	+68·8	167·1
நஞ்சநாடு *	106·4	+24·1	153·9

குறிப்பு.—*சென்னை விவசாய இலாக்காவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

22.ம் பக்கத் தொடர்ச்சி

றன. முள் உள்ள கத்திரி வகைச் செடிகளாயின் அவற்றில் முட்கள் மறைந்து விடுகின்றன. நோய் தாக்கிய செடி குட்டையாகவும் சிறுத்த இலைகளையுடைய பக்கக் கிளைகளை அடர்த்தியாகக் கொண்டவையாகவும் தோன்றுகின்றன. இவ்வாறு கத்திரியின் இயற்கைத்



இலை சிறுத்தல்

தோற்றமே மாறிவிடுகின்றது. இத்தகைய செடிகளில் பூக்கள் உண்டாவதில்லை. பூக்கள் தோன்றினாலும் இலைப்பாகம் போல பசுமை நிறம் பெற்றுக் காணப்படுகின்றன. தாக்கப்பட்ட செடியிலிருந்து எவ்விதப் பலனும் கிடைக்காது. இந் நோய் இரு வகை வெள்ளை தத்துப் பூச்சிகளால் (White Jessids) மற்ற செடிகளுக்குப் பரவுகிறது.

தடுப்பு முறை—

நோயின் அறிகுறி தோன்றியதும் அத்தகைய செடிகளைப் பிடுங்கி அழித்துவிட வேண்டும்.

இந் நோயால் பாதிக்கப்படும் தக்காளி, புகையிலை முதலானவைகள் (Solanaceous hosts) கத்திரி பயிரிடும் நிலத்திற்கு அருகாமையில் வளராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

நோய் பரவுவதற்குக் காரணமான வெள்ளைத் தத்துப் பூச்சிகளை, பூச்சி கொல்லி மருந்தினைக் கத்திரிச் செடிகளில் தெளித்து அப்போதைக்கப்போது அழித்து விட வேண்டும்.

கூதாதாம, ஓலூர் போன்ற மா ரகங்களுக்காக முதல் பரிசுகள் பெற்ற திரு. R. நாகராசன், சாத்தூர் பரிசு பெறுதல்.

வீட்டில் தயாரிக்கப்பட்ட சிறந்த திராட்சை பழப் பொருள், ஜெல்லி முதலிய வற்றுக்கான முதற் பரிசு களைப் பெறும் குமாரி. வினோதினி வாசுதேவன், கோவை.

ரஸ்தாளி, பச்சைநாடன், ராஜவாழை முதலிய ரகங் களுக்கான முதற் பரிசுகளைப் பெற்ற ஆடுதுறை வாழை ஆராய்ச்சிப் பண்ணை சார்பில் வாழை ஆராய்ச்சி அலுவலர் திரு பக்தவத்சலு பரிசு பெறுதல்.



(பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, ஏப்ரல் 2, 3 தேதிகளில் திராட்சை மற்றும் தோட்டக்கலைக் காட்சியின்போது மத்திய உணவு-விவசாயத்துறை காரியதரிசி திரு B. சிவராமன் பரிசு வழங்கினர்.)

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1966

விவசாய நெறியாளர் சிறுநாவலூரில், கல்சர் 2410 நெல்வயலைப் பார்வையிடுதல்.



கனத்த கதிர்களுடன் காட்சியளிக்கும் 'கல்சர் 2410, நெல் வயல் (புதுப்பாக்கம்)

20—4—66 அன்று திருமழிசையில் நடைபெற்ற வயல் தின விழாவின்போது செங்கல்பட்டு கலெக்டருடன் விவசாயிகள் 'கல்சர் 2410' நெல் வயலைப் பார்வையிடுகின்றனர்.